REGD. M. 4842

திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 6 | 13-6-48 | இதழ் 52

சந்தேகம் சரிதான்

"ஆசியநாடுகள் அரசியல் அடிமைத்தனம் நீங்கி, இப்பொழுதுதான் சுதந்திரம்பெற்று வருகின்றன. சில நாடுகள், தங்கள் நாடுகளுக்கு உகந்தவழியில் போராடி இந்தச் சுதந்திரத்தைப் பெற்றிருக்கின்றன. ஆகையால், வெளியாரின் மூலதனத்துடன் பொருளாதார அடிமைத்தனம் வந்து, அரசியல் சுதந்திரத்திலும் அது தலையிட்டு விடுமோ என்று இந்த நாடுகள் சந்தேகப் படுமானால், அது இயற்கையானதே."

உதகை மாநாட்டில் இந்தியப்பிரதிநிதி

(8-6-48)

★ மரத்துண்டு! ★

—✻—

நீண்டகாலமாகக் கலனாகிக் கிடந்த வீட்டை, மிகச் சிரமப்பட்டு, செலவிட்டு, பழுது பார்த்து, குடி இருப்பதற்குத் தக்கவிதமான தாக்கினார் தருமலிங்கம். வீடு, மண்மேடாகித்தான் போகும் — அதைப் பழுது பார்ப்பதற்குப் பணமும் நேரமும் சிரமமும் அதிகம் தேவை. இதைவிடப் புதிய, அருமையான, வீடே கட்டிவிடலாம். தருமலிங்கம் வீண்வேலையில் ஈடுபடுகிறார்—சிரமம் தான் பலன்! என்று கூறினர், பலர்; இருக்கும் வீட்டையே சரியாகப் பார்த்துக்கொள்ள முடியாத உல்லாச வாழ்வினர்.

"பாம்புப் புற்று புறக்கடையில்; தெரியுமோ!"

"ஆமாம்! அதற்கு அருகே ஒரு பாழுங் கிணறும் உண்டு; பார்த்திருக்கிறேன்."

"கடைக்கால் மட்டும், பலமானதாம்."

"என்ன பலம்! ஏதோ, இரண்டு தலைமுறைகளுக்கு முன்னாலே, அந்தக் காலத்திலே பலமானவை என்று கருதப்பட்ட சாமான்களைப் போட்டு, கடைக்கால் அமைத்திருக்கிறார்கள்."

"சுவரிலே, பல இடம்,...."

"பிளந்து போயிருக்கிறது; தரையிலே எங்கே பார்த்தாலும் குழிகள்; கூரை ஒழுக்கல்."

"பேசாமல், அதை அப்படியே விட்டுவிட்டால், தானாக, மண்மேடாகி விடும்."

"பிறகு, கத்தரியோ, வெண்டையோ, பயிரிடலாம்."

"இதைப்போய், பழுது பார்த்து, வீடாக்கிக் குடி போகிறேன் என்று கூறுகிறாரே, தருமலிங்கம்!"

"பழுது பார்த்து, வீடாக்கி, குடிபோகிறாரா!"

"பைத்யக்காரராக இருக்கிறீரே! குடிபோய் விட்டார் அங்கே! அங்கு குடி இருந்து கொண்டே, பழுது பார்க்கப் போகிறாராம்."

பலரும் பேசினர்—சிலர், தருமலிங்கத்திடமே கூறினர். அவரோ, பழுதுபார்க்க முடியும் — வேண்டுமானால் பாருங்கள்—என்னால் முடியும்—அதற்கு இன்னின்ன வழிகள் உண்டு, என்றெல்லாம் பேசவில்லை.

"கஷ்டந்தான்! வீண் தொல்லைதான்! ஆனால், கவனிக்காமலிருந்துவிட்டால், குட்டிச்சுவராகத்தானே போகும்—கள்ளி காளான் முளைத்து, கழுதை மேயுமிடமாகி, ஊருக்கே, கேடாகப் போகுமே!" என்று கூறிவிட்டு,

பழுது பார்ப்பதற்காக, அங்கேயே சென்று தங்கி, சிரமப்பட்டு, வீட்டைச் சரியாக்கி, குடியிருப்பதற்கு இலாயக்கானதுதான் என்று (முன்பு குறைகூறினவர்கள் கூடக்) கூறும்படியான நிலையை உண்டாக்கினார்.

ஆற்றலாலும், ஓயாத உழைப்பாலும், இந்த மகத்தான காரியத்தைச் செய்து முடித்தவரைப் பாராட்டவும், அவரால், திருத்தி அமைக்கப்பட்ட வீட்டைக் காணவும், பலர் வந்தனர். வந்தவர்களில் ஒருவர், வீட்டின், புறக்கடைக்குப் போகும் வழியில், ஒரு மரத்துண்டு, இருக்கக்கண்டார்.

"இது என்ன செம்மரமா?"—என்று கேட்டார் தருமலிங்கத்தை.

தருமலிங்கம், அப்போதுதான், அந்த மரத்துண்டைப் பார்த்தவர் போலப் பேசலானார்.

"இருக்கும்! அல்லது, வேறு ஏதாவது வகையான மரமாகவும் இருக்கும்." என்றார்.

இதற்குள் புதியவர், மரத்துண்டைப் பார்வையிட்டு, "இல்லை, தருமலிங்கம்! இது தேக்குத்தான்! நல்லவிதமாகவே இருக்கிறது. சரியான அளவு! அழகான சாமான் செய்யலாமே, இதைக்கொண்டு!" என்றார்.

"ஆமாம்........" என்று, அர்த்தமற்ற முறையிலே, பேசினார் தருமலிங்கம்.

இதற்குள் புதியவர், தூண் செய்து, இந்த இடத்தில் நிறுத்தி, அதற்கு ஏற்றபடி, இன்னவிதமாக ஒரு சிறுமாடம் அமைக்கலாம்—கட்டடம், அழகாகத் தோற்றமளிக்கும், என்றெல்லாம் புதிய விளக்கமே கூறலானார். தருமலிங்கம், தலை அசைத்தார்.

நாட்கள், மாதங்கள், ஆண்டுகளும் ஓடின! மரத்துண்டு, அங்கேயே கிடந்தது.

"சரங்கள் போடலாமே! வாசலில், அழகு வளைவுகளுக்கு உபயோகிக்கலாமே! அதைச் செய்யலாமே, இதைச் செய்யலாமே! — என்று எவ்வளவோ பேர், எத்தனையோ யோசனைகளைக் கூறினர் தருமலிங்கத்திடம். அவர், எதற்கும், இசையவுமில்லை — மறுக்கவுமில்லை — "ஆமாம்! அது சரி!—ஆகட்டும்!—பார்ப்போம்!"— என்ற அளவோடேயே, பேச்சை முடித்துவிடுவார்.

மரத்துண்டு, இருந்த இடத்திலேயே கிடந்தது.

விவரமறியாதவர்கள், "இது என்ன சரியான மரமல்லவா!" என்று கேட்பர்; தருமலிங்கம், "இதுவா! அருமையான மரம்! உபயோகமானது! நல்ல மரம்"— என்று பாராட்டுவார். அவர்கள் ஆச்சரியமடைந்து, "அப்படியானால், ஏன் இதை, இப்படியே போட்டு வைத்திருக்கிறீர்? உபயோகப்படுத்துவதுதானே!" என்று கேட்பர். தருமலிங்கம், அவர்களிடமும், "ஆமாம்—செய்யவேண்டும்" என்றுதான் கூறுவார்.

குப்பை கூட்டவேண்டிய நேரங்களிலோ — அல்லது, இடுக்கிலே தேளோ, வேறு ஏதேனும் விஷப்பூச்சியோ பதுங்கும்போதோ, மரத்துண்டை, நகர்த்துவார்கள்—வேலை முடிந்ததும், மீண்டும் மரத்துண்டு இருந்த இடத்துக்கே போய்ச் சேரும்.

"இந்தக் கட்டையை இங்கேயே போட்டு வைத்திருப்பதால், 'போக வர' வழிக்குக்கூட இடைஞ்சலாக இருக்கிறது. குப்பை, கூளம், இடுக்கிலே சேருகிறது—என்று வீட்டினர் குறைகூறிப் பார்த்தனர்.

"அது ஒரு பக்கமாக இருக்கிறது—அதனாலே, உனக்கென்ன இடைஞ்சல் — வழியை அது அடைத்துக்கொண்டில்லை" என்று கூறிவிடுவார் தருமலிங்கம்.

நல்லமரம்—வேலைப்பாட்டுக்கு ஏற்றது—அழகான பலபொருள் செய்யலாம் அதைக்கொண்டு—என்று பலர் பேசியபிறகும், இருந்த இடத்தி

லேயே, கிடந்தது, மரத்துண்டு. எனவே முதலில், அதை உபயோக மானபொருள் என்று எண்ணினவர்களில் சிலருக்கு, அது, வெறும், 'கட்டை'யுமாகிவிட்டது — அதை வெட்டி, விறகு ஆக்கினால், அடுப்படிக்கு நல்லது, என்றுகூட எண்ணினர் — அவரிடமும் கூறினர். அவரோ "அடுப்பெரிக்க உங்களுக்கு வேறுஎதுவும் கிடைக்கவில்லையோ! இதைப்போய், விறகு ஆக்கும்படி சொல்கிறீர்களே! உங்களுக்கு ஏதாவது மரச்சாமான்களின், தரமும் உபயோமும் தெரிந்தால் தானே"—என்றுசற்றுக்கண்டித்துப் பேசுவார்.

"ஒரு காரியத்துக்கும் இதை உபயோகப் படுத்தாமலிருக்கவே, விறகுக்காவது ஆகட்டுமேஎன்று சொன்னேம்" என்று அவர்கள் விளக்கம் கூறுவர்.

"சரிசரி, எனக்குத் தெரியும், நீங்கள் போங்கள்" என்று கோபிப்பார் தருமலிங்கம்.

மரத்துண்டோ, அங்கேயேகிடந்தது. மரத்துண்டுதானே!

தேள்ஓடும் அதன்மீது—பல்லி ஓடும்! குப்பைகூளம் பக்கத்திலே சேர்ந்து உறவுகொண்டாடும். ஆனால், மரத்துண்டு, அதனால் பாதிக்கப்படவில்லை. தேள்கொட்டினால் என்ன! அது மரத்துண்டுதானே!

"தருமலிங்கம் வீட்டிலே பார்த்தேன், ஒரு நல்ல மரத்துண்டு! அது கிடைத்தால், நமது காரியத்துக்கு, பொருத்தமாக இருக்கும்."

"ஆமாம் நானும் பார்த்திருக்கிறேன்—நீண்ட நாளாக அவரிடம் இருக்கிறது."

"ஏதேனும் காரியமாகத்தான் அவர் அதைவைத்துக்கொண்டிருப்பார்."

"அப்படித் தெரியவில்லையே! இவ்வளவுநாளாகவா, அவருக்கு, அதைக்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமலிருக்கும்!"

"யாருக்குந்தரவும் மாட்டார்!"

என்றும், ஊரிலே, பலர் பேசிக்கொண்டனர். தருமலிங்கம், மரத்துண்டை இருந்த இடத்திலேயே போட்டுவைத்தார் — மரத்துண்டு தானே, அது எப்படி, இடம்விட்டு இடம் நகரும்! அங்கேயேகிடந்தது!!

காற்று மழை அடித்தது ஒருநாள்! மண் சுவர்கள் கரைகிற நிலைமை! ஜன்னல்கள் படார்—படார்—என அடித்துக் கொண்டன. தருமலிங்கத்தின் வீட்டின் சமயலறைச்சுவர், வீரலிட்டது. சாய்ந்து விடுமோ—சரிந்து விடுமோ என்று கவலைப் படும் நிலைமை.

"சுவர் சாய்ந்து விடும் போலிருக்கிறதே" என்று கூவினர் வீட்டினர்.

தருமலிங்கம், யோசனையில் இருந்தார். காற்றும் மழையும்கலந்து அடிக்கிறது—சுவர் சரிவதற்குத் தன்னைத் தயாராக்கிக் கொண்டது! தருமலிங்கத்துக்கும் யோசனை உதித்தது, வீட்டினரில் சிலரைக் கூப்பிட்டார்! "டே! மரத்துண்டு, இருக்கிறதே, அதைப் பிடித்துக் கொண்டு போய், சுவருக்கு, முட்டுக் கொடுங்கள்" என்றார். செய்தனர். சுவர் சரியவில்லை! காற்றும் மழையும், கொஞ்சநேரத்திற்குப்பிறகு, நின்றுவிட்டது. தருமலிங்கம் வீட்டிலே, சமயற்கட்டுச் சுவர், பலமில்லாதது—பிளவு உள்ளது—ஆகவே இந்தக் காற்று மழைக்கு, கீழே விழுந்து போயிருக்கும், என்று எண்ணிக் கொண்டனர்—சிலர். அவர்களிலே ஒருவர், மழை விட்ட பிறகு வந்தார்—தருமலிங்கத்தைக் காண. சுவருக்கு மரத்துண்டு, 'முட்டு' கொடுக்கப்பட்டு, இருப்பதைக் கண்டார்.

"இதற்காகத்தானா, இந்த மரத்துண்டை இவ்வளவு காலமாக, எதற்கும் உபயோகிக்காமல் வைத்திருந்தீர்" — என்று சிரித்துக் கொண்டே கேட்டார். தருமலிங்கம் "ஆமாம்" என்றார்—அதுவும் ஒப்புக்கு. மரத்துண்டுக்குத் தெரியாது—தன்னைப் பற்றியும் தன் உபயோகத்தைப் பற்றியும், அவர்கள் இருவரும் பேசியது! எப்படித் தெரியும்! அது மரக்கட்டை தானே!! சரியும் சுவருக்கு, "முட்டு" ஆகி நிற்கும் நிலைமையும் அதற்குத் தெரியாது. மரக்கட்டைதானே!!

சரிய இருந்த சுவரைப் பழுது பார்த்து, பலமானதாக்கினார் தருமலிங்கம். பிறகு 'முட்டு' தேவையில்லை-எனவே பழையபடி மரத்துண்டு, கீழே கிடத்தப்பட்டது.

நாளாவட்டத்திலே, அந்த மரத்துண்டிலே, 'செல்' பிடிக்கலாயிற்று — மரத்துண்டுதானே! உள்ளேயே தின்றுகொண்டிருந்தது, கரையான் கூட்டம். மரக்கட்டைக்கு இயல்பாக இருந்த தரமும் வலிவும்போய் விட்டது.

அந்தநிலையிலே, வீட்டுக்கு வந்த ஒருவர், மரத்துண்டைக் காட்டிக் கேட்டார், "இது என்ன, பயனில்லையா?" என்று. கேட்டுவிட்டு, அருகே சென்று மரத்துண்டைத் தள்ளிப்பார்த்தார்—செல் ஏறியிருக்கக்கண்டு, "ஓஹோ ஹோ! இதனால் தானா இதை எதற்கும் உபயோகிக்காமலே இருந்துவிட்டீர்கள்" என்று கேட்டார். தருமலிங்கம் குறிப்பாக ஒருபதிலும் கூறவில்லை. "நான் திடமாக இருந்தேன் —பயன்பட்டிருப்பேன்-பலர் எதிர்பார்த்தனர்-எடுத்துரைத்தனர் — பயன்படுத்தவில்லை—மூலையில்கிடந்தேன் — இப்போது கரையான் தின்றுகொண்டிருக்கிறது-அதற்கு நான் என்ன செய்ய!" என்று கேட்க, வாய் ஏது மரத்துண்டுக்கு!

நோட்டீஸ்

செங்கல்பட்டு அடிஷனல் ஸ்மால்காஸ்கோர்ட்டு

S. C. 127 of 1948

புதுப்பாக்கம் K. குப்புசாமி அய்யங்கார்—வாதி.

D. ஸ்ரீனிவாஸன், தற்காலம் ஆவடி (Engineering Parks Checker) உத்தியோகம்.

—பிரதிவாதி.

வாதி அண்டிமாண்டு பாபத்து பாக்கி ரூபாய் 80/-ம் பின்வட்டி கோர்ட்டுச் சிலவுடன் வசூலிக்க பிரதிவாதி பேரில் தாவா செய்து 28—6—48 பகல் 10 மணிக்கு வாய்தா போடப்பட்டிருக்கிறது. அன்று பிரதிவாதி கோர்ட்டில் ஆஜராகாவிட்டால் ஒருதலைபாக டிக்கிரி செய்யப்படும்.

U. V. தேசிகாச்சாரியார்,
வாதி வக்கீல்.

“வரவேற்பு, பிரமாதமானதாக இருக்கவேண்டும். அலைகடலின் ஆபத்துகளைப் பொருட்படுத்தாது, கண்காணா இடங்களிலே சென்று, நமக்குக் கீர்த்தியையும் செல்வத்தையும் தேடித்தந்த, அந்த மாவீரனுக்கு மகத்தான வரவேற்புநடத்தி, அவன் மனம் குளிரும்படி செய்ய வேண்டும்.”

“நானும் அதேதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். அவன் உலக வரலாற்றிலே இடம்பெறப்போகும் உத்தமன். ஊர்மக்கள் அவன் பெயரைக் கேட்டமாத்திரத்தில், களிப்பால் கூத்தாடுகிறார்கள். அவனுடைய ஆற்றலைக்கேட்டு மன்னர்கள் பொறாமைப்படுகிறார்கள். கிடைத்தற்கரிய பொக்கிஷம் அவன். அவனால் நமது நாட்டுக்கே தனியான புகழ் ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட, பேருபகாரியை, நாம் பெருமைப்படுத்தவும், பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறோம். நமது வரவேற்பு இதுவரை இந்த மண்டலத்திலே எவருக்குமே நடைபெறாதவிதமானதாகத்தான் இருக்கவேண்டும். அவன் சாமான்யனல்ல. அவன் அடைந்துள்ள வெற்றி வானவில்லல்ல. எக்காலத்திலும் நிலைத்துநிற்கக்கூடிய வெற்றிஅது.”

“பாவம்! ஊரைவிட்டு, உற்றார் உறவினரைவிட்டு, அலைகடலில், கலத்தில், கடுங்காற்றுக்கும் சுழலுக்கும், கடலிலே தோன்றும் பல்வேறு ஆபத்துகளுக்கும் ஈடுகொடுத்துக் கொண்டு, தொலைதூரம் சென்று, இதுவரை எவர் கண்ணிலும் படாமல், எவர் கருத்துக்கும் எட்டாமல் இருந்துவந்த பலபுதிய பிரதேசங்களைக் கண்டுபிடித்து, அங்கிருந்த காட்டுமிராண்டிகளுடன் கடும் போரிட்டு வென்று, அங்கு நம்நாட்டுக் கொடியைப் பறக்கவிட்டு, அந்த நாடுகளை நமதுராஜ்யத்துக்குப் புதிய செல்வமாக்கினான், அந்த வீரன். எவ்வளவு தீரம், சகிப்புத்தன்மை, உழைப்பு, ஆபத்துகளை எதிர்த்தொழிக்கும் திறமை வேண்டும், இப்படிப்பட்ட காரியமாற்ற. இவன், இணையில்லா வீரன்.”

“இலட்சிய புருஷன்! அவனுடைய ஒரே ஆவல், பிறர் கண்ணுக்குப் படாமல் உள்ள பிரதேசங்களைக் கண்டு பிடிக்கவேண்டும் என்பது. அந்த இலட்சிய சித்திக்காக அவன் தன் உயிரைக்கூட இழக்கச் சித்தமாக இருக்கிறான்.”

“மலைமீதேறி மூலிகை பறித்துவரச் சொன்னால், ஏறிஇறங்கச் சிரமம் ஏற்படுமே என்பதற்காக, சென்றேன், தேடினேன், அங்கு மூலிகை இல்லை என்று பொய் கூறிவிடும் புல்லர்கள், நம்மைச் சுற்றி ஏராளமாக உள்ளனர் — உண்டு கொழுத்த உருவங்கள்!”

“இல்லை என்று கூறிவிட்டால், வேறுமலை சென்றுதேடு என்று கூறுவரே எனப்பயந்து, தேடிய மூலிகைக்குப் பதிலாக ஏதேனும் ஒரு போலியைக்கொண்டுவந்துகொடுத்துவிடும் எத்தர்கள் ஏராளம்! நமது கோலம்பஸ் போலக் குவலயத்தில் எவரும் இல்லை! அவன் கர்மவீரன்! அவனை மகத்தான முறையிலே— மன்னர்கள் கண்டு பொறாமைப்படும் விதமாக—மாவீரர்களின் வெற்றி விழாக்களைத் தோற்கடிக்கும் விதமாக — வரவேற்கத்தான் போகிறேன்.”

“போகிறோம் என்று கூறுங்கள்!”

“ஆமாம்! வரவேற்போம்.”

“தோட்டத்தில் விருந்து! நாட்டியக்கச்சேரி! இசை! கவிவாணர்களின் புகழ்மாலை!”

“இவ்வளவும், இதற்கு மேலும் உண்டு. அவனுக்கு, வரவேற்பு வைபவம் நடத்தும்போது, நமது சபைக்கு அவனை வரவழைக்கும் போது, பொன்னாடையை மேலே விரித்து, அவனை அந்தக் கூரை வழியாக வரச் சொல்லவேண்டும்.”

“பொன்னாடை அவனுக்கு அளிக்கலாம் என்கிறீரா?”

“அல்ல! அல்ல! பொன்னாடை பலருக்கு அளித்திருக்கிறோம். அவன் நடந்துவரும் வழியிலே, மேலே, வானமல்லவா, கூரையாக இருக்கிறது! அதற்குப்பதில், பொன்னாடையை விரிப்போம்! தங்கக்கூரை! பாபம்! எத்தனை நாட்கள், திக்குத் தெரியாத கடலில், திகைத்துப் போன தோழர்கள் தந்த தொல்லையைச்சமாளித்துக்கொண்டு, அவன், வானத்தை அண்ணாந்து பார்த்து ஆயாசப்பட்டிருப்பான்.”

“ஆமாம், வானமே, எனக்குக் கூரை! கடலே, என் விளையாட்டு மைதானம்! என்று எண்ணியிருப்பான்.”

“ஏன்! கடலே, என் கல்லறையோ என்றுஏங்கியுமிருந்திருப்பான். இன்பவல்லி! அவன், இந்தவரவேற்பின் போது, அண்ணாந்து பார்க்கட்டும், தங்கத் துகிலை! முகில்கொண்ட வெளியைக்கண்டான்! இன்று பொன்னாடையைக்கண்டு பூரிக்கட்டும்.”

“சரியானயோசனை! நாதா! நல்ல யோசனை! பொன்னாடை தக்கதுதான்! வரவேற்பு, வைபவமாகத் தான் இருக்கும்.”

* * *

வரவேற்பு, வைபவமாகத்தான் இருந்தது. பொன்னாடை, வானமென விரிக்கப்பட்டது. பூரிப்புடன், அதன்கீழ் பவனிவந்தான், கோலம்பஸ். இந்த மகத்தான வரவேற்பு நடத்தி, அவனைச் சபைக்கு அழைத்து, பக்கத்தில் ஆசனம் தந்து பாராட்டிஅவனுடையபெரும் புகழுக்கு, இராஜமுத்திரை பொறித்தனர், ஸ்பெயின் நாட்டு, அரசரும் அரசியாரும்-பேர்டினாண்டும் இஸபெல்லாவும். பார்சிலோனா பட்டணத்திலே, 1493-ம் ஆண்டு மார்ச் 15-ந்தேதி, இந்த வரவேற்பு நடை

(18-ம் பக்கம் பார்க்க)

இரும்பாரம்

16-ம் பக்கத் தொடர்ச்சி

உலகு அறியச் செய்தது, நாம் தான்!!"—என்ற எண்ணம் தவழத் தானே செய்யும். அந்த விசையை அறிந்து, பக்குவமாக வேலை செய்தனர். தந்திரம் பலித்தது.

பெர்டினண்டினால் கொலம்பசுக்குக் கீர்த்தியா? கொலம்பசினால் பெர்டினண்டுக்குக் கீர்த்தியா? யாரால் யார் பலன் பெற்றார்கள்? பெர்டினண்டு கிடைத்திராவிட்டால், கொலம்பசுக்கு, இந்த நிலை ஏது? கொலம்பஸ் கிடைத்திராவிட்டால், பெர்டினண்டுக்கு, புதிய ராஜ்யங்கள் ஏது?

கொலம்பஸ், பெர்டினண்டை மதிக்கிறானா இல்லையா? பெர்டினண்டு கொலம்பசின் சேவையையும் திறமையையும் பாராட்டுகிறாரா, இல்லையா?

இருவருக்கும் உள்ள தொடர்பு நீடிக்குமா, இடையே அறுந்துபடுமா? கொலம்பஸ் வெற்றிமேல் வெற்றி பெறுவது பெர்டினண்டுக்கு நல்லதா, கெடுதலா?

இப்படிப்பட்ட கேள்விகளைக் கிளப்பினால், எப்படிப்பட்ட தூய்மையான உள்ளம் படைத்தவர்களும், இப்பக்கமோ அப்பக்கமோ, இரண்டோர் வார்த்தை பேசாதிருக்க முடியுமா! அந்த வார்த்தைகள் அவ்வளவும், கொலம்பசுக்குக் கேடு விளைவித்தன. கொலம்பஸ் தொலை தூரத்தில இருந்த போது, இந்த விஷம் நன்கு பரவி, விபரீத விளைவுகளை உண்டாக்கிவிட்டது.

ராணி இஸபெல்லா கொலம்பசுக்கு அளித்திருந்த அதிகாரத்தை ரத்துசெய்துவிட்டார், ஒரேவரியில். கொலம்பசின், நிலை குலைந்தது. ராஜாங்க கோபம், அவ்வளவோடு முடியுமா? கொலம்பசை நீக்கிவிட்டு அந்தப்பதவியை வகித்து, அதிகாரம் செலுத்த போவாடில்லா என்றொருவனையும் அரசியார் அனுப்பி வைத்தார்.

ஹிஸ்பானியோலாவுக்கு வந்து சேர்ந்தான் புதிய அதிகாரி—கொலம்பசை நீக்கினான்-அப்போது கொலம்பசுடன், பார்த்தலோமியோவும் இருந்தான். அரசியாரின் உத்தரவுப்படி, இருசகோதரர்களுக்கும், விலங்கிடப்பட்டது. வெற்றிவீரன், கரங்களிலே விலங்கு! எந்தக் கரங்களைப் பிடித்துக் குலுக்கி, எந்த இஸ்பெல்லா அரசியார் மரியாதை காட்டினார்களோ, அதே கரங்களில், அதே அரசியாரின் உத்தரவுப்படி,

இரும்பாரம்!

கலம் வருகிறது ஸ்பெயினுக்கு! அதிலே, கைகளில் விலங்கு பூட்டப்பட்டு, கைதியாகி வருகின்றான் கொலம்பஸ்! அவன் மனநிலை எப்படி இருந்திருக்கும்! என்னென்ன காட்சிகள் மனக் கண்முன் தோன்றி மறைந்திருக்கும். அவன் உள்ள உரம் படைத்தவன், எனவேதான், அவனால், அந்த அக்ரமத்தைச் சகித்துக் கொள்ள முடிந்தது. உள்ளத்தில் உறுதி குறைந்தவர்கள், அப்போதே மனம் உடைந்து மாண்டிருப்பர், கலத்திலேயே. கொலம்பஸ், கையிலே இருந்த விலங்கைக் கண்டான், கலங்களுக்குக் காவலனாகச் சென்றவன் கைதியாகக் கலத்திலே கொண்டு வரப்படுவதைக் கண்டான்—முன்பு நடைபெற்ற விருந்து, வைபவம் ஆகியவைகளை எண்ணினான்-நாட்டிலே, இப்படிக் காட்டு முறையும் இருக்கிறதல்லவா என்று—எண்ணினான். பாபம்! அவனுக்குக் கண்ணீர்வடிக்கவும் நேரமிருந்திருக்காது, அலை அலையாக எண்ணங்கள் கிளம்பியபடிதான் இருந்திருக்கும்.

பார்சிலோனாவில் எப்படிப்பட்ட வரவேற்பு!

ராஜ சபையிலே எத்தகைய உபசரிப்பு!

இப்போது, கடலிலே, கலத்திலே கைதி! கரங்களிலே விலங்கு!!

கலத்தைச் செலுத்தினவனால் இந்தக் காட்சியைக் காணச் சகிக்கவில்லை. அவன் 'தளைகளை எடுத்துவிடுகிறேன்' என்று கூறினான் கொலம்பசிடம்.

"என்ன காரியமப்பா செய்யத் துணிகிறாய்! ஸ்பெயின் நாட்டு மன்னனின் நன்றி காட்டும் நற்குணத்துக்குச் சிறந்தசான்றல்லவா, இந்த இரும்பாரம்! இதை எடுத்துவிடுவதா! கூடாது, கூடாது! என் கரங்களிலே, இந்த இரும்பாரம் இருக்கட்டும், மரண பரியந்தம். நான் இந்த விலை மதிக்கொணாத பரிசை, இழக்கமாட்டேன். மானிலத்தில், யாருக்குக் கிடைக்கும் இப்படிப்பட்ட பரிசு! —இரும்பாரம்!" என்று கூறிக் கடைசிவரை, அதை எடுக்க மறுத்துவிட்டான்.

கலம், துறைமுகம் வந்து சேர்ந்தது. 'சேதி' எங்கும் பரவிற்று.

"கொலம்பசுக்கு விலங்கிட்டார்களாம்!" கடலை அடக்கினோனுக்குக் கரத்திலே விலங்கு!

'கொலம்பஸ் கைது செய்யப்பட்டான்'

'ஸ்பெயின் நாட்டுப்புகழ் பரப்பியவனுக்கா, இந்தத் தண்டனை?'

'நமது கொடியை, திக்குத் தெரியாத இடத்திலெல்லாம் பறக்க விட்டவனையா, இப்படி அவமதிப்பது?'

இது என்ன அக்ரமம்!

ஏன் இந்த அநீதி!

கொலம்பசுக்கா, விலங்கு!!

மக்கள், மனம் துடி துடிக்கலாயிற்று— முழக்கமிடலாயினர்! கோபிக்கலாயினர்! ஸ்பெயின் முழுவதும் கோபாவேசம்! கொலம்பசுக்கு விலங்கு! கொலம்பஸ் கைதியாக்கப்பட்டான்! கொடுமை கொடுமை! என்ற கூக்குரல் எங்கும் கிளம்பிற்று—வலுத்துக்கொண்டே இருந்தது—மன்னன் மனதையும் அரசியின் அவசரத்தீர்ப்பையும், மக்கள் எதிர்த்தனர்! மன்னன், மக்களின் முழக்கத்தைக் கண்டான—கொதிப்பின் காரணத்தை உணர்ந்தான்.

கொலம்பசை விடுதலை செய்க!—என்று உத்தரவிட்டான். கொலம்பஸ் குற்றமற்றவன் என்று கூறினான். கொலம்பசுக்கு பரிசளிக்கப்படும் என்றான்—அளித்தான். மக்கள் வென்றனர்—மாவீரன் விடுதலை செய்யப்பட்டான்— மன்னன் கொலம்பசின் மீது பொறாமைக்காரர்கள் பூசிய, தூசைத் துடைத்தான்.

கொலம்பஸ் நிரபராதி! மக்களின் தீர்ப்பு! மன்னனும் அதை அங்கீகரித்தான். கொலம்பஸ் நிம்மதியை இழந்தான்! மன்னனோ, மக்களோ, அதை அறியவில்லை.

கொலம்பஸால் பெர்டினண்டுக்கு இலாபமா? பெர்டினண்டால் கொலம்பசுக்கு இலாபமா? - இதை அல்லவா, விஷமிகள் பிரச்னையாக்கினர்—மக்கள் ஏன் அதற்கு இடமளித்தனர்? பிரசனை அதுதானே!

கொலம்பஸ், பெர்டினண்டு, இருவரும், காலத்தின் சின்னங்கள், பெர்டினண்டு, அஞ்சா நெஞ்சம் படைத்த ஆராய்ச்சியாளர்களை ஆதரிக்கும் காலப்போக்கின் சின்னம்—கொலம்பஸ், புதிய இடங்களைக் கண்

டறிய எவ்விதமான கஷ்டத்தையும் ஏற்கத்துணியும் காலப்போக்கின் சின்னம்! இதை ஏன், மக்கள் உணரவில்லை.

முடிதரித்த பெர்டினண்டும், மரக்கலமேறிய கொலம்பசும், நிரந்தரமல்ல—ஆனால் அவர்களின் கூட்டுறவால்கிடைத்த புதியநாடுகள்! அவை நிரந்தரம்! ஏன் மக்கள், இதை எண்ணிப்பார்க்கவில்லை

யாரால், யாருக்கு இலாபம்?- ஏன், மக்கள் இந்த விபரீதக் கணக்குப்போட்டனர்? தெளிவாகத் தெரிவதும், மறுக்க முடியாததுமான, வேறோர் கணக்கு இருக்கிறதே, கொலம்பசும் பெர்டினண்டும் கூடிப் பணி செய்ததால், புதிய ராஜ்யமல்லவா கிடைத்தது, ஸ்பெயினுக்கு—புதிய பிரதேசங்களல்லவா தெரிந்தது உலகுக்கு-இலாபம் அதுதானே—அந்தக்கணக்கை ஏன் மறந்தனர்—அந்த இலாபம் கெடும்படியான காரியத்தில் ஏன் ஈடுபட்டனர்? கடலில், செல்லும் கலம்! கடலால் கலம் பயன் பெறுகிறதா, கலத்தால் கடல் பயன் பெறுகிறதா, என்பதா பிரச்னை! மக்கள் இதையன்றோ பிரச்னையாக்கினர்—கூட்டுறவு கெட வேலை செய்தனர்.

கொலம்பசின், மனதிலே, இந்தக் கருத்துகள் புகுந்து குடையலாயின. அவனுடைய பழைய உற்சாகம் பாழ்பட்டது. மீண்டும்கூடச் சென்றான்; மேலும் சில இடங்களைக்கூடக் கண்டுபிடித்தான் — ஆனால் பழைய கொலம்பசல்ல! பழையகொலம்பசை, ஸ்பெயின் நாட்டு வேந்தராவது நம் திட்டத்தை ஏற்றுக்கொண்டு, ஆதரித்தாரே என்ற பெருமகிழ்ச்சியுடன், பணியாற்றிவந்த பழைய கொலம்பசைச் சாகடித்துவிட்டார்கள்!

பொன்னுடை! இரும்பாரம்! ஒருவனின், வாழ்நாளில், இரு நிலையையும் கண்டாகிவிட்டது. கைலாகு கொடுத்த அரசியாரையும் பார்த்தாகிவிட்டது. கைக்கு விலங்கிட்டு இழுத்துவா, அவனை, என்று சட்டளை பிறப்பித்த அரசியாரையும் கண்டாகிவிட்டது. வாழ்க்கையிலே ருசி இல்லை. நடமாடிக்கொண்டுதான் இருந்தான், ஐம்பதாண்டுகள் முடியுமட்டும்—ஆனால் பழைய கொலம்பசின், நிழல்போல! வறுமை வந்துற்றது, வாட்டம் பிடித்தாட்டிற்று, நாலுபேர் முன்னிலையில் வருவதுமில்லை, தனியனானான் கொலம்பஸ். 1506-ம் ஆண்டு இறந்தான். இறக்கும்வரையில், அவன் அந்த இரும்பாரத்தை மட்டும் இழந்துவிடவில்லை! எத்தனை இரவுகள், அந்த இரும்பாரத்தின்மீது, அவனுடைய கண்ணீர் சிந்திற்றோ, யார் கண்டார்கள்! இறக்கும்போது, அவன் கேட்டுக்கொண்டபடி, அந்த இரும்பாரம் அவனுடன் சேர்த்துப் புதைக்கப்பட்டது. ✻

7-ம் பக்கத் தொடர்ச்சி

காட்டி வெகுவேகமாக அரியபெரிய நன்மைகளைத் தேசத்தில் செய்துவிடலாம். நாடக சபைகள் இந்தத் தொண்டை நாட்டில் செய்து வருகின்றன.

நாடகக்கலைக்கு ஏனைய கலைகளைக் காட்டிலும் அபூர்வ சக்தியொன்றுண்டு. மக்களை உடனடியாகச் செயலில் (action) இறங்கச் செய்வது நாடகக் கலைதான். இதனால்தான் நாகரிக நாடுகள் தங்கள் சீர்திருத்தக் கொள்கைகளைப் பிரசாரம் செய்வதற்கு நாடகங்களைக் கருவியாக உபயோகித்து வந்தார்கள்; வருகிறார்கள். வெற்றியும் கண்டார்கள்.

“ஆயிரம் பிரசங்கங்களைவிட ஒரு நல்ல நாடகம் எவ்வளவோ மேலானது” என்று ஒருபேரறிஞர் சொல்லியிருப்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

நாடகக்கலை மிக்க சக்தி வாய்ந்ததென்பது மறுக்கமுடியாதஉண்மை. பொதுவாக எல்லாக் கலைகளும், குறிப்பாக நாடகக் கலை ஒளிதரும் விளக்கைப்போன்றது. திருவிளக்கின் ஒளியால் திருக்குறளும் படிக்கலாம்; திருட்டுக் கையெழுத்தும் போடலாம். பந்தத்தின் உதவியால் பாதை தெரிந்தும் நடக்கலாம். பக்கத்து வீட்டையும் கொளுத்தலாம். விளக்கை உபயோகப்படுத்தும் முறையிலிருக்கிறது விளையும் பயன். பயன்படுத்தும் மனிதனின் மனப்பண்பைப் பொறுத்திருக்கிறது. இதை நாம் நன்றாகக் குறிப்பாக நாடகக் கலைஞர்கள், நாடகப் புலவர்கள், புரவலர் முதலியோர்கள் நன்றாக உணர்ந்து கொள்ளவேண்டும்.

கலையை எந்தக்கோணத்திலிருந்து பார்த்தாலும் அது வாழ்க்கையோடு பிணைந்து கிடப்பதைக் கண்டு கொள்ளலாம். தொழிலோடு ஒன்றியிருப்பதையுணரலாம். தொழிலில் முதிர்ச்சியும் தேர்ச்சியும் ஏற்படும்போது கலைதோற்றமளிக்கிறது. ஆனால் தொழிலில் தேர்ச்சிப் பொருளையும் தருகிறது. இங்கேதான் கலைக்கும் காசுக்கும் நெருக்கல்; போராட்டம்; மோதுதல், முட்டுதல்எல்லாம்.

தொழிலின் தேர்ச்சியும் முதிர்ச்சியும்பொருளைக்கொண்டுவந்துகுவிக்க வேண்டும் என்று கருதும் தருவாயில் அங்கே கலை மறைகிறது. இங்கே பொன்னுண்டு; பொருளுண்டு; பணியாட்கள் பலர் உண்டு. ஆனால்புகழ்ஓடிஒளிந்துகொள்கிறது. ஆனால் தொழிலின் நல்லாக்கத்தில் ஆற்றலில் கலைமிளிரும்போது, கலை ஒளி கதிர்விட்டுப் பிரகாசிக்கும்போது காசு பணம் கண்ணுக்கும் கருத்துக்கும் தெரியாமல் மறைகிறது. கலைக்கும் காசு பணத்துக்குமிடையே இப்படி மிகப்பெரிய பள்ளமுண்டு என்பதை இங்கேதான் நாம் நன்றாக அறிகிறோம். ஏன் — அறிவுறுத்தப்படுகிறது.

மனித வாழ்வில் எஞ்சி நிற்பதும், நிலைபெற்றதும் புகழ் ஒன்றேயாம். வாழ்க்கையில் சுவைமிக்க பாகம் புகழ்மணம் வீசும் புனிதப் பகுதிதான். இதைக் கலைஞன், தன் சிந்தனா சக்தியாலும், கலையாக்கத்தாலும் எட்டிப்பிடிக்கின்றான். அவன் காசைப்பெரிதாகக்கருதமாட்டான். பொன்னைப் பெரிதாக மதிக்கமாட்டான். அவன் எவருக்கும் எந்த முறையிலும் கட்டுப்படமாட்டான். நாட்டின் நற்றொண்டே கலைஞனின் லக்ஷியம். எல்லோரும் இன்புற்றிருப்பதுவே அவனுக்கு இன்பம்.

இப்போது சொல்லுங்கள். கலைஞர்கள் நாட்டுக்கும் நல்வாழ்வுக்கும் எவ்வளவு தேவையானவர்களென்று …………” ●

“நியூ ஜஸ்டிஸ்” ஆண்டு மலர்

(ஆங்கில வாரஇதழ்)

சிறந்த கட்டுரைகளைக் கொண்டு 27—6—48-ல் வெளிவரும்.

தனிப்பிரதி ரூ 1

விவரங்களுக்கு:—

“நியூ ஜஸ்டிஸ்” ஆபீஸ்

வண்ணாரப்பேட்டை

சென்னை—21.

★ கலையும் வாழ்வும் ★

✲

நாகர்கோவிலில் மே. 14-ந் தேதி நடைபெற்ற மூன்றாவது தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் கலைவாணர் N. S. கிருஷ்ணன் அவர்கள் "கலையும் வாழ்வும்" என்னும் பொருள் பற்றி ஆற்றிய சொற்பெழிவின் சுருக்கம்:—

"அழகுடையது கலை; ஆனால், அழகு மட்டும் கலையல்ல; அழகு படுத்துவதுதான் கலை. எப்படி?

மாலை நேரம் கதிரவன் தன் ஒளியில் வானவீதியில் தங்கமுலாம்பூசிய வண்ணமாகவே ஆழியை நோக்கி அதிவேகமாக மறையப்போகும் மனோஹரக்காட்சி கண்ணையும் கருத்தையும் கவரும் அழகின் பரிமளிப்பு. ஆனால், இது கலையா?

இந்தக் காட்சியே ஒரு சித்திரக்காரன் காண்கின்றான்; புறக்கண்களால் மட்டும் அல்ல; அறிவுக்கண்களாலும் பார்க்கின்றான். சித்திரக்காரன் சிந்தையிலே இந்த அழகுக் காட்சி செவ்வையாகப் பதிகிறது. பின்பு விந்தையாக உருவகமாகிறது. சித்திரமாகவெளிவருகிறது. இங்கே, கலை உற்பத்தியாகிறது. ஆகவே, கலையும் அழகும் ஒன்றோடொன்று பிணைந்து கிடக்கிறது.

அழகுநிறைந்த அந்திச்சூரியனின் அதிமனோஹரக்காட்சி வாழ்வுக்கு வகைதேடுவதாகும். உதயசூரியன் வானவீதியில் தோன்றிச், சஞ்சாரம் செய்து தனது கடமையைத் திறமையாகச்செய்கிறான், உச்சி வானிலே வந்த சூரியன் அப்படியே ஆடாமல், அசையாமல் எப்போதும் ஒரே நிலையாகநின்றுவிடுவதானால்,உலகவாழ்வு என்னவாகுமென்பதைச் சிந்தித்துப் பாருங்கள். சூரியாஸ்தமனம் இல்லாவிடில் உலகவாழ்விலும் அஸ்தமனம் ஏற்பட்டுவிடும் என்று சொல்லவா வேண்டும். ஆகவே அழகுக்காட்சிகள் ஒருவிதத்தில் கலைக்கு உதவியாயிருப்பதுபோல, வாழ்வை வளம்படுத்தும் வகையிலும் பேருதவியாக அமைந்திருக்கிறது. இன்னும் வாழ்க்கையை வளம்செய்யும் மக்கள் மனப்பண்பை வளரச்செய்யும் பல்வேறு துறைகளிலும் கலைகள் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்து கிடக்கிறது. முக்கியமாகத் தொழிலுக்கும் கலைக்கும் தொன்றுதொட்டே நெருங்கியதொடர்புண்டு.

கடும் வெயிலில் கல்லுடைக்கும் தொழிலாளத் தோழன், காலவேகத்தில் கோபுரம்கட்டும் கலைஞனாகிறான். உளிகொண்டு வேலைசெய்யும் ஒருவன், அம்மிகொத்தும் சாதாரணமான ஒருவன், நாளடைவில் தொழிலூக்கத்தினாலும் உயர்நோக்கத்தினாலும் கலையை விளக்கும் சிலையைச்செய்யும் சிற்பியாகின்றான். இதிலிருந்து கலைவளர்ச்சிக்கு, தொழில் பெருக்கம் எவ்வளவுதூரம் தேவையாகவும், உதவியாகவும் இருக்கின்றதென்பதைத் தெரிந்துகொள்ளலாம். ஆகவே கலையைப் போற்றுவது தொழிலைப்போற்றுவதாகும். இந்தக் கருத்தைக்கொண்டுதான் கவிமணி தேசியவிநாயகம் அவர்கள் கலைமகளின் இருப்பிடங்களைக் குறிப்பிடும்முறையில்,

"நாடிப் புலன்கள் உழுவார் கரமும்" என்றார் முதலடியிலே. ஏர்பிடித்து உழும் உழவனின் உழைப்புக் கரத்தில் கலைமகள் களிநடனம் புரிகின்றாளாம். தொழிலாளியின் உயர்வும் கலைக்கும் தொழிலுக்குமுள்ள பிணைப்பும் இதில் வெகு அழகாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

தொழில் வளர்ந்தால்தான் கலை வளரும். தொழிலாளர்கள் பெருகிய தேசத்தில்தான் கலைஞர்கள் தோன்றுவார்கள். பாரதியார்,

"கலை வளர்ப்போம் கொல்லர்
உலை வளர்ப்போம்"

என்று பாடிவைத்ததின் கருத்தும் இதுவேதான். கலையை வளர்ப்பதும், தொழிலைவளர்ப்பதும் ஒன்றேதான். மக்கள் வாழ்வில் கலை, பின்னிப் பிணைந்து கிடக்கிறது. கலையில்லையென்றால் வாழ்வில்லை. ஏன்—வாழ்வில் ருசியில்லை; சுவையில்லை.

குழந்தை நன்றாகத் தூங்குவதற்கு இசையின் ஒரு பகுதியான தாலாட்டுப் பாட்டு உதவுகிறது. சின்னஞ்சிறு குழந்தை நன்றாகத் தூங்கினால்தான் வளர்ச்சியடையும். வாழ்வு பெறும். நோய் நொடிகள் அகலும். ஆகவே குழந்தைகளின் நல்வாழ்வுக்கு இசைக்கலை மிகத் தேவையாயிருக்கிறது; இருந்து வருகிறது.

அடுத்தபடி பிள்ளைப்பருவம். இந்தப் பருவத்திலேதான் விளையாட்டுகள், வேடிக்கைகள் எல்லாம்; வாழ்வின் இன்பமான பகுதி. நம்மையறியாமலே, நம்மிடையே வந்து நடமாடிப்போகும் வாழ்வின் இன்பப்பகுதி விளையாட்டாகக், கலைபிள்ளைப்பிராய வாழ்வில் பிணைக்கப்பட்டிருக்கிறது—இல்லை-பிணைந்தே இருக்கிறது. பல விளையாட்டுகள் உண்டு, உதாரணமாக, கிளித்தட்டு என்ற விளையாட்டை எடுத்துக்கொள்ளுங்கள். கோட்டையைத்தாண்டி தந்திரமாக—ஆனால் தைரியமாக முன்னேறிச் செல்லும் முயற்சியில் விளைந்த குதூகல விளையாட்டு இது. வாழ்க்கையிலும் பல கோட்டைகளைத் தாவிச் செல்லவேண்டிய நாம் பிள்ளைப் பிராயத்திலும் இதைச்செய்கிறோம். கிளித்தட்டில் மறிப்பவனை ஏமாற்றி அங்குமிங்கும் ஓடித்துணிச்சலாகமுன்னேறிப்போகவேண்டும். நடுவே பறந்தடிக்கும் கிளி சுற்றிக்கொண்டேயிருக்கும். இதன் கையிலும் அகப்படக்கூடாது. வெகு சாமர்த்தியமான விளையாட்டு.

பெண்களுக்கு, கும்மியடித்தல், கோலாட்டம்போன்ற விளையாட்டுக் கலைகள். இவை வெறும் வேடிக்கைக் கூத்து கட்டுமல்ல, உறுப்புகளுக்கு ஊக்கமும், உறுதியும் வளர்ச்சியும் தரும் உயர்ந்த அமைப்புமுறையைக் கொண்ட உன்னதவிளையாட்டுக்கலை. கன்னிப்பெண்கள் ஆடும் கலை விளையாட்டு.

இனி, பாட்டாளி மக்கள் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தப்பாடுபடும் போது, பாடிக்கொண்டு வேலை செய்து வருவதை நாம்பார்க்கிறோம். கல்லுடைக்கும்போதும் பெரிய பெரியபாரங்களைப்புரட்டும்போதும் பாடுகிறார்கள் பாட்டாளி மக்கள். இந்த முறையில் ஏற்பட்டதுதான் ஏற்றப்பாட்டு, உவகைப்பாட்டு........

நான் ஒரு நடிகன் என்பது தெரிந்ததுதானே. ஆனாலும் சொல்லி வைக்கிறேன். ஏனென்றால் நாடகக் கலையைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்வேன் என்று நீங்களும் எதிர்பார்ப்பீர்கள். நானும் சொல்லித்தான் ஆகவேண்டும். மக்கள் வாழ்வைச் சீர்படுத்தும் வகையிலே, செப்பனிடும் முறையிலே, பண்படுத்தும் பாதையிலே, சீர்திருத்த நெறிகளை நாடகரூபமாக, நடிப்புக்கலையின் மூலமாக எடுத்துக்

(6-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி] 13—6—48 [ஞாயிறு

கண் துடைக்கும் பேச்சு

✲

ஏகாதிபத்திய சர்க்கார் ஒழிந்து, ஜனநாயக சர்க்கார் ஏற்பட்டதும்; அந்நிய ஆட்சி ஒழிந்து, சுயஆட்சி ஏற்பட்டதும், மக்கள் தங்களுடைய குறைகள் கவனிக்கப்பட்டுத் தீர்க்கப்படுமென்று கருதினர். அந்நிய-ஏகாதிபத்தியம் ஒழிந்தது ஜனநாயக-சுயஆட்சி ஏற்பட்டது. ஆனால் மக்களின் குறைகளோ கவனிக்கப்படவில்லை. ஏகாதிபத்திய சர்க்கார் இருந்தபோது மக்கள் அடைந்த துன்பங்களைவிட, இப்போது தான் மக்கள் அதிக துன்பங்களை அடைகிறார்கள் என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. இதற்குக் காரணம் என்ன? சர்க்காரின் சிரத்தையின்மையும், முதலாளிகளிடம் சர்க்கார் கொண்டுள்ள பாசமுமாகும்.

உதாரணமாக, கோயமுத்தூர் மில்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள், தங்கள் குறைகள் தீர்க்கப்படவேண்டுமென்பதற்காக வேலை நிறுத்தம் செய்தனர். அதன் பயனாக மில்கள் எல்லாம் மூடிக்கிடந்தன. பின்னர், மில் முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே சர்க்காரால் செய்யப்பட்ட சமரச முடிவின் பயனாக மில்கள் திறக்கப்பட்டு தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர் என்று சொல்லப்பட்டது. ஆனால், இப்போது பத்தாயிரம் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கப்படாமல் இருப்பதாகவும், அதனால் அவர்களில் ஒன்பதுபேர் உண்ணாவிரதம் இருந்து வருவதாகவும் செய்தி கிடைத்திருக்கிறது. சர்க்காரின் தலையீட்டின்காரணமாக ஏற்பட்ட சமரசமுடிவு, இன்னும் பத்தாயிரம் தொழிலாளர்கள் வேலையின்றித் தவிக்கும் நிலைமையையே உண்டாக்கிவிட்டது. எனவேதான் சர்க்காரின் சிரத்தைக் குறைவும் முதலாளிகளிடம் அவர்கள் காட்டும் பாசமுமே தொழிலாளர்கள் படுந் துன்பங்களுக்குக் காரணம் என்று கூறவேண்டியிருக்கிறது.

மில்கள் மூடிக்கிடந்த காலத்தில், மில்முதலாளிகளுக்கும் சர்க்காருக்கும் நடந்த பேச்சு வார்த்தைகளில், "மூன்றாவது ஷிப்டு" வைப்பதன் மூலம் தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பதாக முதலாளிகள் சர்க்காருக்கு வாக்களித்தனர். ஆனால் இன்றுவரை முதலாளிகள் அந்தக் காரியத்தைச் செய்யவே இல்லை. சர்க்காரும் அதைப்பற்றி யாதொரு சிரத்தையும் எடுத்துக்கொள்ளவில்லை.

சர்க்காரே தொழில்களை எல்லாம் எடுத்து நடத்தித் தொழிலாளர்களின் குறைகளைத் தீர்க்க முற்படவேண்டுமென்ற யோசனையை நாம் பலதடவைகளில் எடுத்துக் கூறினோம். ஆனால், சர்க்கார் அந்த யோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை. சர்க்கார் திடீரென்று எல்லாத் தொழில்களையும் ஏற்று நடத்த முடியாதென்றும், படிப்படியாகவே அதனைச் செய்ய முடியுமென்றும் சாக்குப்போக்குக்கூறிவிட்டது. சர்க்கார் இவ்வண்ணம் கூறியது முதலாளிக்குக் கொண்டாட்டமாகவே முடிந்தது. சர்க்காரே தொழில்களை ஏற்று நடத்தாவிட்டாலும், சர்க்காருக்கு அந்த நிலைமையும், தொழில்களைத் தாங்களே எடுத்து நடத்த வேண்டுமென்ற நல்லெண்ணமும் வரும் வரையிலாவது தொழிலாளர்களின் நியாயமான குறைகளையாவது நீக்க வேண்டாமா?

கோவை மில் முதலாளிகள் சர்க்காருக்குக்கொடுத்த வாக்குறுதியின்படி தங்களுடைய மில்களில் "மூன்றாவது ஷிப்டு" முறையை ஏற்படுத்தாத காரணம் என்னவென்று ஏன் சர்க்கார் முதலாளிகளைக் கேட்கக்கூடாது? கேட்டிருந்தால் பத்தாயிரம் தொழிலாளர்கள் வேலையின்றித் தவிக்கவும், ஒன்பது பேர் உண்ணாவிரதம் இருக்கவுமான நிலை ஏற்பட்டிருக்குமா?

பத்தாயிரம் பேரைப் பட்டினி கிடக்க விட்டுவிட்டுப், பத்துலட்ச ரூபாயைக் காந்தி ஞாபகார்த்த நிதிக்குக் கொடுப்பதில் ஏதாவது பொருள் இருக்கிறதென்று எவராவது கூறமுடியுமா? காந்தியடிகளின் கோள்கைகளைச் சிதறடிக்கும் முறையில் பத்தாயிரம் ஏழைத் தொழிலாளர்களைப் பட்டினி போடுவதும், அதேசமயத்தில் காந்தியடிகளின் கொள்கைகளை நாட்டில் பரப்பும் நல்ல காரியத்துக்குப் பத்துலட்சம் ரூபாயை அள்ளிக் கொடுப்பதும் எந்தவகையில் நியாயமான செயல் என்று கேட்கிறோம். பத்துலட்சம் ரூபாயைக் காந்தி நிதிக்குக் கொடுப்பதன் வாயிலாக மில் முதலாளிகள், சர்க்காரைத் திருப்திப்படுத்தி விடலாமென்று கருதுகிறார்கள் போலும்! முதலாளிகள் தாங்கள் தொழிலாளர்களுக்குச் செய்யும் கொடுமைகளை மறைக்கவே இத்தகைய நன்கொடைகளைத் தாராளமாக வழங்குகிறார்கள் என்ற உண்மையையே 'தினமணி' தனது 9—6—48 தலையங்கத்தில்,

> "நேருஜியிடம் நேரில் காந்திஜி ஞாபகார்த்த நிதிக்குப் பத்துலட்சம் ரூபாய் கொடுதுவிட்டதோடு தம் கடமை முடிந்துவிட்டதென்று முதலாளிகள் நினைப்பதாகத் தோன்றுகிறது"

என்ற வாசகங்களால் சுட்டிக்காட்டி முதலாளிகளின் இந்தப் போக்கைக் கண்டித்திருக்கிறது.

பொதுமக்களின் விழிப்பேற்பட்ட இந்தக்காலத்தில் சர்க்காரை மட்டுமல்ல, எவரையும் ஏமாற்றித் தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம் என்ற நினைப்பை முதலாளிகள் இனிமேல் விட்டுவிடுவதோடு, சர்க்காரும் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை நேர்மையானமுறையில் நிறைவேற்றி வைப்பதிலுள்ளசிரத்தைக்குறைவை நீக்கிப், பொது மக்களின் ஆதரவைப் பெறும் முறையில் நிர்வாக முறையை மாற்றி அமைத்துக் கொள்ளவும் வேண்டும்.

ஒருவனுடைய சுகபோக வாழ்வுக்காக ஆயிரக் கணக்கானவர்கள் அரைவயிறு கால் வயிறு கஞ்சிக்கும் வழியற்று, உடலை வருத்தி உழைத்துச் செல்வத்தைக் குவிக்கும் கொடுமையை மாற்றியமைப்பதையே இன்றைய சர்க்கார் தன்னுடைய கடமைகளில் முக்கியமானதாகவும், உடனடியாகச் செய்யப்படவேண்டியதாகவும் கொள்ள வேண்டும். ஏழை மக்களின் உழைப்பால் மதோன்மத்த வாழ்வு நடத்த எண்ணுபவர்களின் மண்டைக் கர்வத்தைத் தவிடுபொடியாக்க வேண்டும். ஒருவர் உழைப்பால் இன்னொருவர் வாழும் மானங்கெட்டமுறை மண்பதையில் இல்லாதொழியவேண்டும். ஏழைகளின் வியர்வை, பணக்காரர்களின் படுக்கை அறைக்குப் பன்னீராக மாறிப் பரிமளிக்கும் நிலைமாறவேண்

டும். இதற்கு, நாட்டிலுள்ள தொழில் நிலையங்கள் எல்லாம் சர்க்காரின் பொறுப்பில்வரவேண்டும். தொழில் முறைகளால் வரும் வருவாய் முழுவதும் நாட்டின் பொதுச்சொத்தாக வேண்டும். அந்தச்சொத்து, நாட்டுக்குத் தேவைப்படும் நல்லபொதுக் காரியங்களுக்குச் செலவு செய்யப்படவேண்டும். இதனைச் செய்வதற்குச் சர்க்கார் எந்தவித சமாதானமும் கூறித் தப்பித்துக்கொள்ள முடியாது.

இன்றைய நிலையில் தொழில்களை எல்லாம் சர்க்கார் ஏற்று நடத்த முடியாதென்பதற்கு ஒரு வேடிக்கையான சமாதானம் கூறப்படுகின்றது. அதாவது தொழில்களை நடத்தக் கூடிய யோக்கியதாம்சம்பொருந்திய திறமைசாலிகள் போதிய அளவு இப்போது இல்லையாம். அதனுலேயே தான், தொழில்களை நடத்தும் பொறுப்பைச் சர்க்கார் உடனடியாக ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறதாம். இந்தப் போலிச் சமாதானத்தைக் கூறும் சர்க்கார், யாது காரணத்தாலோ அடிப்படையான ஒரு உண்மையை மறந்துவிடுகிறது. அதாவது, இன்று நாட்டில் தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் தொழில்கள் எல்லாம் எப்படி நடைபெறுகின்றன? என்ற உண்மையைச் சர்க்கார் ஊன்றிக் கவனித்துப் பார்க்குமானுல், அந்தத் தொழில்களையெல்லாம் திறமையாகவும், மிதமிஞ்சிய வருவாயைத் தரக்கூடியதாகவும் நடத்தக்கூடியவர்கள் நாட்டில் பலர் இருக்கின்றனர் என்பது புலப்படும். அவர்கள் யார் என்பதும் சர்க்காருக்கு நன்கு தெரியும். தெரிந்தும் இந்தப் போலிச் சமாதானத்தைச் சர்க்கார் கூறுகிறது. ஒரு உத்தரவினுல் சர்க்கார் இந்தக் காரியத்தை மிக எளிதாகச் சாதித்து விட முடியும்.

நாட்டிலுள்ள தொழில் நிலையங்களை எல்லாம் சர்க்கார் ஏற்றுக் கொண்டு, அந்தத் தொழில்களை நடத்தும் முதலாளிகளுக்கும், ஏஜண்டுகளுக்கும் ஒரு உத்தரவு, "இன்று முதல் சர்க்காரே இந்தத் தொழில் நிலையங்களை எல்லாம் ஏற்றுக் கொண்டுவிட்டதால், இனி நீங்கள் இவற்றின் மேற்பார்வையாளர்களாக இருந்து, தொழில்கள்சரியான முறையில் நடைபெறுவதைக் கவனித்துக் கொள்ளவேண்டும். இதற்காக உங்களுக்கு மாதம் ஒன்றுக்கு இவ்வளவு சம்பளம் தரப்படும்." என்று அதிகாரபூர்வமானஒரு சட்டத்தைச் செய்துவிடலாம். இதனைச்சர்க்கார் செய்யமுடியாதென்று எவரும் கூறமாட்டார்கள். ஒருவேளை, தொழில் ஸ்தாபனங்களின் முதலாளிகளிடம் சர்க்கார் கொண்டுள்ள தனிப்பட்ட பாசமும் நட்பும் இதனைச் செய்வதற்குத் தடையாக நிற்கலாமேயன்றி, வேறு எந்தக் காரணமும் இதனைச் செய்யமுடியாதென்பதற்குக் கூறமுடியாது. குறிப்பிட்ட ஒரு சிலரின் நட்பையும் பாசத்தையும் சர்க்கார் பெரிதெனக் கருதுமானுல், அது, இந்நாட்டிலுள்ள பலகோடி ஏழைப்பாட்டாளி மக்களின் கோபத்தையும் பகைமையையுமே மேலும் மேலும் வளர்ப்பதாக வந்து முடியும் என்பதைச் சர்க்கார் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

பல கோடிக் கணக்கான ஏழைப்பாட்டாளி மக்களின் ஒத்துழைப்பும் ஆதரவுமே இன்று நடைபெறும் சுதந்திர சர்க்காருக்கு அடிகோலித்தந்ததென்பதை உள்ளத்தில் கள்ளமின்றி உணர்ந்து பார்க்கும் பண்பைப் பெற்ற எவரும் நாம் கூறும் இந்த யோசனையைத் தப்பென்று கருதமாட்டார்கள். இன்று நாம் அடைந்திருக்கும் சுதந்திரத்துக்குக் காரணம், இந்நாட்டிலுள்ள விரல்விட்டு எண்ணக்கூடிய சில முதலாளிகளின் ஒத்துழைப்பே தான் என்று எந்த மதிகெட்டவனும் கூறமாட்டான். ஏழைப்பாட்டாளி மக்களின் சர்க்காராக இன்றைய சர்க்கார் நடைபெறுகிறதென்றும், பணக்காரர்களுக்குப் பக்கபலமாக இருந்த ஏகாதிபத்தியச் சர்க்கார் ஒழிந்ததென்றும் மக்கள் கருதிக் களிப்புறும் முறையில் காரியங்களை நடத்தச் சர்க்கார் முன்வர வேண்டும் என்று கூறுகின்றோம்.

இனிச், சர்க்காரே, தொழில் ஸ்தாபனங்களை யெல்லாம் எடுத்து நடத்தப்போகிறதென்று அறிவித்துவிட்டால், இன்று டாக்டர் அழகப்பச் செட்டியார், சென்னைக்கும் டில்லிக்கும் விமானப் போக்குவரத்தை நடத்தவும்; அதனுல்வரும் இலாபத்தை அவரே அடையவுமான நிலை ஏற்பட்டிருக்குமா என்று கேட்கிறோம்.

தொழில் ஸ்தாபனங்களை எல்லாம் சர்க்கார் திடீரென்று எடுத்து நடத்திவிடமுடியாது; படிப் படியாகத்தான் அந்தக்காரியத்தைச்செய்ய முடியும் என்று சர்க்கார் கூறுவதில் சிறிதளவாவது உண்மை யிருக்குமானுல், புதிது புதிதாக உண்டாக்கப்படும் தொழில்களை எல்லாம் தனிப்பட்ட முதலாளிகளேநடத்துவதற்கு அனுமதி கொடுத்திருக்குமா என்பதனையும் பொதுமக்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். 7-6-48ல் சென்னைப்பிரதமரே டாக்டர் அழகப்பச் செட்டியாரின் விமான சர்வீசை ஆரம்பித்துவைத்து ஆசி கூறியிருக்கிறார். புதுப் புதுத் தொழில்களை யெல்லாம் தனிப்பட்ட முதலாளிக்கே கொடுக்கும் நிலைமையில் உள்ள சர்க்கார், இந்நாட்டின் தொழில் ஸ்தாபனங்களை எல்லாம் படிப்படியாக ஏற்றுக்கொள்ளுமென்பது கண்துடைக்கும் பேச்சென்று தானே மக்கள் கருதுவர்.

எனவேதான், சர்க்காரின் இந்தப் போக்கு மாறவேண்டுமென்றும், தொழில் ஸ்தாபனங்களை எல்லாம் சர்க்கார் எடுத்து நடத்தமுடியும் என்ற நல்லெண்ணம் சர்க்காருக்கு உண்டாகும் வரையிலாவது தொழிலாளர்களின் நியாயமான குறைகளைத்தீர்த்து வைப்பதில் கவனம் செலுத்தவேண்டுமென்றும், புதிதாக உண்டாக்கும் தொழில்களையாவது தனிப்பட்ட முதலாளிகளிடம் கொடுக்காமல், சர்க்காரே ஏற்று நடத்த வேண்டுமென்றும் கூறுகின்றோம்.

—●—

மறைவு

தோழர் பி. இரத்னவேலுத் தேவர் அவர்கள் சிலகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்து 10-6-48 இரவு சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் உயிர்நீத்தார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். தோழர் இரத்னவேலு அவர்கள் திரிசிராப்பள்ளியில் நல்ல செல்வாக்கோடு இருந்தவர். சட்டசபை உறுப்பினராக இருந்தவர். திருச்சி முனிசிபாலிட்டிக்கு சேர்மனாக இருந்த காலத்தில் திருச்சி நகருக்குப் பல நன்மைகள் செய்திருக்கிறார். குறிப்பாக நகரில் குடிதண்ணீர் வசதியை நல்லமுறையில் அமைத்துக் கொடுத்தார். இவருடைய பிரிவால் வருந்தும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் ஆறுதல் கூறுகின்றோம்.

தொடர் கதை

கற்பனைச் சித்திரம்

[6—6—48 தொடர்ச்சி]

"இது எனக்குத் துளியும் பிடிக்க வில்லை. நமது பக்கத்திலே இருக்கும் காங்கிரசை வடக்கே இருக்கிறவர் கள் ஆட்டிவைப்பது என்றால், அது என்ன நியாயம்?" என்று கேட்டார் இளையபூபதி. ஐயர் புன்சிரிப்புடன் "நான்சொன்னேனா நியாயம்என்று. நிலைமை அவ்விதம் இருக்கிறது. அது சரியா, தவறா என்பதைப் பற்றிச் சர்ச்சை செய்துகொண் டிருப்பதா நம் வேலை. காரியமல் லவா முக்கியம்! காங்கிரசிலே சேர்ந் தோம் காசும் கொஞ்சம்செலவிட்டு, கேவலம் ஒரு ஜில்லா போர்டுக்குப் போய் உட்காருவதுதானா நமது நோக்கமாக முடிந்துவிடுவது! வண் டிப் பட்டறை வரதராஜுலுவும் வாணக்கடைக் கோவிந்தனும்கூட ஜெயித்திருக்கிறார்கள் இந்த ஜில்லா போர்டு தேர்தலில் — காங்கிரசின் தயவினாலே! அப்படி ஜெயித்தவர்க ளுடன் ஒருவராக—பத்தோடு பதி னொன்றாக — இருந்து விடுவதா! செச்சே! உமது அந்தஸ்த்துக்கு இது போதாது. வடக்கே சென்று பெரிய காங்கிரஸ் தலைவர்களைக் கண்டு பேசி அவர்களுடைய சிநேகி தத்தைப் பெற்றுக்கொண்டு வந்து விட்டால் மாகாணக் காங்கிரசிலே உமது மதிப்புஉயர்ந்துவிடும். மந்திரி வேலையும் நிச்சயமாகக் கிடைத்து விடும். பாஷை தெரியாத ஊரிலே போய் நாம் யாரைப் பிடித்து இந்தக் காரியத்தைச் சாதித்துக்கொள்வது என்று யோசிக்கிறீர். தெரிகிறது உமது முகத்திலிருந்து! அதற்குத் தக்க ஏற்பாடு செய்துவிட்டேன். என் உறவினன் ஒருவன் டில்லியிலே வேலையில் இருக்கிறான்—சர்க்கார் உத் யோகம்—அவனுக்குப் பெரிய பெரிய தலைவர்களெல்லாம் பழக்கம். அவன் நமக்குச் சகலஉதவியும் செய்வான்" என்றார். "பலே ஆசாமி ஐயா நீர்!" என்று இளையபூபதி பாராட்டினார். காங்கிரஸ் தலைவர்களைக் கண்டு பேசி நமது காரியத்துக்குச் சாதகமான நிலைமையையும் உண்டாக்கிக்கொள் ளலாம்; அதோடு காசி கயா பிர யாகை அயோத்தி பண்டரிபுரம் முதலிய திவ்யக்ஷேத்திரங்களையும் தரிசித்துக்கொண்டு, போகிறகதிக்கு நல்லதும் தேடிக்கொள்ளலாம்—பல வகையிலும் பலன் உண்டாகும்" என்று ஐயர் கூறினார். "யாத்ரை போகிற மாதிரியாகக் கிளம்ப வேண்டியதா?" என்று கேட்டார் இளையபூபதி. "அடடா! முக்கிய மான விஷயத்தைக் கூறாமல் மற்ற வற்றைச் சொல்லிக்கொண்டிருந்து விட்டேனே. அடுத்த மாதக் கடைசி யில் அகில இந்தியக் காங்கிரஸ் அரிபுராவிலே நடைபெறுகிறது— நாம் அதற்குப் போகிறோம்—அப்ப டியே இந்தக் காரியமெல்லாம் முடித்துக்கொள்கிறோம்" என்றார். ஐயர் சொன்ன பிறகு மளமள வென்று ஏற்பாடுகளைச் செய்தார் இளையபூபதி. பணமுடை. பரவா யில்லை; முந்திரித்தோப்பை விற்று விடு என்றார் கணக்கப்பிள்ளையிடம். வேறு சில இடங்களிலே பணம் கடன் வாங்கினார். சில நகைகளையும் விற்றார். ஆகமொத்தம் பத்தாயிரம் ரூபாய் கிடைத்தது. நானும் ஐயரும் இளையபூபதியுடன் முதல் வகுப்பு வண்டியிலே கிளம்பினோம். ரங்கன் மூன்றாவது வகுப்பிலே வந்தான்.

பல வருஷங்களாகக் காங்கிரசிலோ அல்லது வேறு ஏதாவது கட்சியிலோ தொடர்பு இருந்தாலல்லவா, இளைய பூபதிக்கு, அரிபுராவில் என்னென்ன நடைபெறும், யாரார் வருவார்கள், என் னென்ன பேசுவார்கள் என்பது தெரியும். புதுத்தொடர்பு; அதிலும், பழையஜெமீன் தாரிடம் கொண்டிருந்த பகைமையைக் காட்டிக்கொள்ள ஒரு சந்தர்ப்பம் என்ப தற்காகத்தானே, இளையபூபதி எலக்ஷ னிலேயே ஈடுபட்டார்; எனவே அவ ருக்கு, அவ்வளவு அக்கறை இல்லை, கட்சி யிடமோ, அந்தக் கட்சியின் வேலைகள் என்று எதை எதையோ பற்றி ஐயர் பேசிக்கொண்டிருந்ததைப் பற்றியோ. கோயிலிலே அர்ச்சகர் செய்கிற சஹஸ்ர நாமத்தின் பொருள் விளங்கி விடுகிறதா, அங்கு செல்லும் பக்தர்களுக்கு! தெரிவ தில்லை—என்றாலும், அர்ச்சகரின் சத்தத் தைக் கேட்கும்போது சித்தத்தை அலைய விடுவது மகாபாபம் என்று எண்ணிக் கொண்டு, பயபக்தியுடன் கேட்டுக் கொண்டுதானே இருக்கிறார்கள்; அது போலவே இளையபூபதி, காங்கிரசின் ஆரம்பம்—வளர்ச்சி — திட்டம்—காங்கிர சார் சர்க்காரிடம் போட்ட சண்டைகள் ஆகியவைபற்றி ஐயர் விஸ்தாரமாகப் பேசிக்கொண்டு வந்ததைக் கேட்டுக் கொண்டிருந்தார். எனக்குச்சிரிப்புத்தான் —ஆனால் என்ன செய்வது! ஐயர் விஷ யத்திலே இளையபூபதிக்கு, மதிப்பு அதிக மாகிவிட்ட நேரம் அது. பயணத்தின் போது நடைபெற்ற பல விஷயங்கள், இளையபூபதிக்கு ஐயரிடம் இருந்த மதிப்பை மேலும் மேலும் அதிகரிக்கச் செய்தது. ஏதாவதோர் இடத்திலே ரயில் நிற்கவேண்டியதுதான் தாமதம், ஐயர், கீழே இறங்குவார்—இப்பக்கம் அப் பக்கம் பார்ப்பார் — பார்த்து விட்டு, "அடடா! அனந்த கிருஷ்ணய்யரா?" என்று ஆச்சரியத்துடன், கூறுவார்— கைதட்டி அழைப்பார்—காதிலே வைரக் கடுக்கனும், விரல்களிலே வைர மோதி ரங்களும் மின்ன, கட்டப்பட்டபற்களிலே வெண்மை மின்ன, யாரேனும் ஓர் வயோ திகர் வருவார். இருவரும் அளவளாவுவர் —ரயில் புறப்படும் வரை. பிறகு, ஆரம் பிப்பார் ஐயர், 'என் பால்ய சிநேகிதன் அனந்தன்! மைசூரில் பிரபல வக்கீல்— மாதம் பத்திலிருந்து பதினையாயிரம் வரையில் வருமானம் அனந்தகிருஷ்ண னுக்கு—அருமையான ஜாதகம். அவனு டைய பார்யாளை, முதலிலே, எனக்குத் தருவதென்றுதான் ஏற்பாடாயிற்று. பிறகு ஜாதகப் பொருத்தமில்லை என்று கூறி, அந்தச் சம்பந்தம் வேண்டாமென்று கூறிவிட்டோம். நம்ம அனந்தன், கல்கத் தாவுக்குப் போகிறானாம். கபூர்தலா மகா ராஜாவுக்கும் இவனுக்கும் பல வருஷ சிநேகிதம்—அவர் என்னமோ, சீமைக் குப் போகிறாராம், போவதற்கு முன்பு அனந்தனைப் பார்த்தாக வேண்டுமென்று தந்திமேல் தந்தி கொடுத்தாராம்—அதற் காகத்தான் அனந்தகிருஷ்ணன் புறப்பட் டிருக்கிறான். எப்போதுமே அவனுக்கு, சிநேகிதாள் என்றால் உயிர்" என்று ஒரு மூச்சு, அனந்தகிருஷ்ண புராணம் படிப்பார். டாக்டர், என்ஜினியர்,பாரிஸ்

டர், ஜட்ஜு, சூபரின்ட்டு, இப்படித்தான் அகப்படுவார்கள், வழி நெடுக. "பிராணனை வாங்கினான் காப்பி சாப்பிட்டாத்தான் என்று, கொடுடாப்பா உனக்கேன் மனக்குறை என்று கூறி, ஒருமுழுங்கு கொட்டிக்கொண்டேன்" என்று கூறி, குமாரசாமியின் குணாதிசயம், அவனிடம் உள்ள குச்சுநாயைப் பெங்களூரில் ஆறு நூறு ரூபாய் கொடுத்து வாங்கின பெருமை, இப்படிப் பேசுவார். உண்மையிலேயே, பலர், ஐயரிடம், மரியாதையுடனும், அன்புடனும் நடந்துகொண்டனர். ஐயர், பலருக்குத் தெரிந்த பேர் வழி என்பதிலே சந்தேகமில்லை. ஏற்கனவே இளையபூபதிக்கு இருந்த மதிப்பு, இதனால் வளராமல் இருக்க முடியுமா! இளையபூபதி, ஐயரிடம் விசேஷ மதிப்புக் காட்டும்போது, நான் மட்டும் சும்மா இருக்கமுடியுமா? கால் பங்கு பயணமாவதற்குள், ஐயர், பெரியமனது வைத்து, எங்கள் இருவரையும் அழைத்துச் செல்கிறார் என்று பலர் எண்ணும்படியான நிலை உண்டாயிற்று—உண்மையோ, ஐயருடைய காப்பி வெற்றிலைப் பாக்குச் செலவு உள்பட, இளையபூபதியுடையது! என்ன செய்வது! இப்படிச் சிலருக்கு யோகம்! தந்திரம் ஒன்று தவிர வேறு முதல் போடுவதில்லை, அவர்கள்—ஆனால் வாழ்க்கை வியாபாரத்திலேயோ அவர்களுக்குக் கிடைக்குமளவு இலாபம், வேறு பலருக்குக் கிடைப்பதில்லை. ஐயர், அந்த ரகத்தைச் சேர்ந்தவர்.

காங்கிரசிலே, முக்யஸ்தர்கள் என்று, சிலரை, இளையபூபதியிடம் ஐயர் அறிமுகப்படுத்திவைத்தார்.

"நம்ம ஜெமீன்தாரர் காங்கிரசிலே சேர்ந்த பிறகு, ஜில்லா கலெக்டருக்குத் தூக்கமே கிடையாது—என்ன ஆகுமோ ஏது ஆகுமோ என்று, திகில். அவர் அப்படிப் பயப்படுவதிலேயும் அர்த்தமில்லாமலில்லை — ஏனெனில் — ஜெமீன்தாரர் ஒரு வார்த்தை சொன்னால் போதும், ஜனங்கள், எதை வேண்டுமானாலும் செய்துவிடுவார்கள்—போலீசாலும் முடியாது — பட்டாளத்தாலும் முடியாது, ஜனங்களை அடக்க" என்று ஒருவரிடம் கூறுவார். இளையபூபதியின் கரங்களைப் பிடித்துக் குலுக்குவார், அந்தப் பிரமுகர்—இஷ்ட தெய்வத்தைத் தரிசித்தவர் போலாவார். "உண்மையிலே, உம்போன்றவாதான், இந்த சுயராஜ்யப் போரை முன்னாலிருந்து நடத்தவேண்டியவா. ஏனென்கிறீரோ! இந்த வெள்ளைக்காராள் நம்ம ராஜ்யத்தை உம்போன்ற பிரபுக்கள், ராஜாக்கள், மகாராஜாக்களிடமிருந்து தானே அபகரிச்சிண்டா; ஆனதாலே இப்ப அவாளை எதிர்த்துப் போராட வேண்டியவா, நீங்கள்தான்! உம்போன்றவாளுடைய வீரதீரம், நம்ம பாரதமாதாவுக்கு ஜெயத்தை நிச்சயமாகத் தரும். வந்தேமாதரம்! நான் அடுத்த ஜங்ஷனில் சந்திக்கிறேன்." என்று கூறிவிட்டுப் போவார். ஐயருக்கு, தன்னிடம், மிகுந்த அக்கறை, அதனாலே, பல பெரிய மனிதர்களிடம், தன்னைப் பற்றிப் பிரமாதமாகப் புகழ்ந்து பேசுகிறார், என்று எண்ணிக் களிப்பார், இளையபூபதி. இவ்விதம் எங்கள் பிரயாணம், ரம்மியமானதாகத்தான் இருந்தது — முத்துராமலிங்கம் வந்து சேருகிறவரையில். எப்படியோ, ஏனோ, தெரியாது, அவன், ஏதோ ஒரு ஜங்ஷனில், வந்தான்—எங்கள் வண்டியிலேயே ஏறிக்கொண்டான். அவன் பிளாட்பாரத்தில் உலவும்போதே, ஐயர், எங்களுக்கு ஜாடை காட்டினார்; கவனியாதவர்கள் போலத்தான் இருந்துவிட்டோம். —ஆனால், முத்துராமலிங்கம், வண்டி புறப்படும்போது, நாங்களிருந்த இடத்திலேயே வந்து ஏறிக்கொண்டான்—வண்டியும் நகர்ந்தது.

"ஐயர்வாளா! அடடா! நம்ம ஜெமீன்தாரர்! அம்மாவுமா?" —என்று கூறிக்கொண்டே, எனக்கு எதிர்ப்புறத்தில் உட்கார்ந்துகொண்டான் முத்துராம். "ஐயர் இளித்தார்—நான் புன்னகை செய்தேன்— இளையபூபதி கெம்பீரமாகத் தலை அசைத்தார்.

"அரிபுராவுக்குத்தானே?" — ஐயர் கேட்டார் அவனை.

"ஆமாம்—வேறே என்ன வேலை வடக்கே—காசிக்குக் காவடி தூக்கிக்கொண்டா கிளம்பப் போகிறோம்" என்றான் முத்துராமன். ஆரம்பமே, சூனாமானாவாக இருந்தது—ஐயர் மௌனமானார்—இளையபூபதி, ஏதோ ஓர் புத்தகத்தைப் பிரித்தார், படிக்கிறவர்போல—அது மட்டுமா—படுத்துக்கொள்கிறாயா, என்று கேட்டு, நான் என்ன செய்ய வேண்டும் என்பதற்கும் ஜாடை காட்டினார். அதாவது முத்துராமனின் வருகை எங்களுக்குப் பிடிக்கவில்லை, என்பதை வெளிப்படையாகவே காட்டினோம்—அவன், எங்களை விடுவதாக இல்லை.

'ஐயர்! அரிபுரா பார்த்துவிட்டு, வேறு எங்கு போவதாக உத்தேசம்?" என்று கேட்டான்.

ஐயர், "சில திவ்ய க்ஷேத்திரங்களையும் தரிசித்துக்கொண்டு வரலாம் என்று...... இளையபூபதி கூறினார்" என்றார்.

"அப்படிச் சொல்லும். திவ்ய க்ஷேத்திர தெரிசனம் இல்லை என்றால், நீர், புறப்பட்டே இருக்கமாட்டீரே. அது சரி, என்ன இது கடைசியிலே, இப்படி ஆய்விட்டதே?" என்று ஏதோ ஓர் கேள்வியைப் பூட்டினான். "எது?" என்று கேட்டார் ஐயர் "ஏன்! காலையிலே பேப்பரைப் பார்க்கவில்லையோ?" என்று பதில் சரம் தொடுத்தான், முத்துராமன்! இந்தச் சமயத்திலே, எப்படி அக்கரையற்று இருக்கமுடியும்! நானும், இளையபூபதியும் அவர்கள் பேசுவதைக் கூர்ந்து கவனிக்கலானோம்.

"என்னய்யா இது, தெரியாதவர் போலப் பேசுகிறீரே! என்னமோ தேசிகாச்சாரி இருக்கார், திருமலாச்சாரியார் சிபார்சு இருக்கு என்றெல்லாம் சொன்னீர், கடைசியில், எட்டு மாதம் நீட்டிவிட்டார்களே!" என்றான் முத்துராமன். 'யாரை? என்ன விஷயம்?" என்று இளையபூபதி கேட்டார். முத்துராமன் 'நம்ம ஐயருடைய தம்பியை, அவர், ஏதோ ஒரு இன்ஷூரன்ஸ் கம்பெனி வைத்து நடத்தி, ஐம்பதாயிரமோ அறுபதாயிரமோ, மோசம் செய்துவிட்டதாக ......" என்று கூறிக்கொண்டிருக்கையிலே, ஐயர் அலட்சியமாக, "மோசம் செய்துவிட்டதாக, எவனோ பொறாமையினாலேபொய்க்கேஸ்ஜோடித்துவிட்டான்" என்றார். "கேஸ், ஜோடித்ததோ, நிஜமோ, தண்டனை நிச்சயமாகிவிட்டது" என்றார் முத்துராமலிங்கம், கொஞ்சம் கேலியாக. கோபம் வெடித்துக்கொண்டு வந்தது ஐயருக்கு, "உனக்குத் திருப்திதானே! பிராமணத் துவேஷி!" என்று கூவினார். முத்துராமலிங்கம், சிரித்துவிட்டு, "வார்த்தைகளை, ஜாக்ரதையாக, ஒழுங்காக, அளந்து, பேசவேண்டும் ஐயர்." என்றான். "அது உன் பிரசங்கத்திலே வைத்துக்கொள்-அந்தக்கேலி-கிண்டல்-குத்தல்-இதெல்லாம். என்னிடம் வேண்டாம். என்தம்பி, அயோக்கியன், மோசக்காரன், என்பது உன் தீர்ப்பு..." என்று பேசிக்கொண்டிருக்கையில், முத்துராமன், அவரைமடக்கி, "என் தீர்ப்பா! கோர்ட் தீர்ப்பய்யா! நீர் இங்கு கொக்கரிக்கிறீர் — என்னசெய்வது— அங்கே, உன்தம்பியே குற்றத்தை ஒப்புக்கொண்டாராமே" என்றார். "ஆமாம்! ஒப்புக்கொள்ளாமல் என்ன செய்வான். நியாயம் வழங்கும் அதிகாரி, ஒரு பிராமணத்துவேஷி—மேலும் சர்க்கார்குலாம்—என் தம்பி என்ற உடனே காங்கிரஸ்காரன், தம்பியைத் தண்டிக்கவேண்டுமென்று தீர்மானித்து விட்டான். காலம் அப்படி இருக்கிறது. இது தெரிந்தது, என்தம்பிக்கு."என்னமோண்ணா!எனக்குக் கிரஹம் சரியாகஇல்லை—வீணாகக்கேசுக்குப் பணத்தைப்போட்டுப்பாழாக்கஎனக்கு இஷ்டமில்லை. நான் குற்றம் செய்தேன் என்று கூறியே விடுகிறேன்" என்று என்னிடம் சொன்னான் — யுக்தம்போல் செய்யடாப்பா என்று சொன்னேன். அவனைத் தண்டித்துவிட்டார்கள். தண்டித்து விட்டதாலேயே அவன் குற்றவாளி என்றுகூறிவிடலாமா? உன் நாக்கு அழுகாமலிருக்குமா? உன்வாழ்வு, எப்போதுமா இப்படியே இருக்கும்? பிராமணர்களுக்கு, என்னென்ன இம்சை வரும், ஆபத்து ஏற்படும், நாசம் சம்பவிக்கும், என்று சதா மனதிலே எண்ணிக்கொண்டேஇருக்கிற,மகாபாபியாச்சே நீ, உன்கதி, கடைசி காலத்திலே, எப்படி ஆகிறதுபார்—புழுத்துச்சாகப்போகிறாய்" என்று, ஐயர், ஆத்திரமும் அழுகுரலும் கலந்தகுரலில் கூவினார். இளையபூபதி,

"என்னஇருந்தாலும் பெரியவர்களை இப்படி இம்சிக்கக்கூடாது" என்று ஐயர்சார்பில் பேசினார். என் பார்வையும், முத்துராமலிங்கத்துக்குச் சாதகமாக இல்லை—ஆனால் அவன் இதற்கெல்லாம் அஞ்சவுமில்லை—தன் போக்கை மாற்றிக்கொள்ளவுமில்லை. "ஆத்திரப்பட்டுக் கூவாதீர், ஐயரே! மண்டைவெடிக்கக்கடவது, மாடு ஆகக்கடவது—என்று சாபம் கொடுக்கிற காலமல்ல இது—அது, அந்தக்காலம்" என்று மீண்டும் கேலியாகவேபேசினான்.

"உன்னை யாரும் இங்கே , அழைக்கவில்லை — அந்தக்காலம் இந்தக்காலம் என்று பிரசங்கம் செய்யச்சொல்லி" என்று சற்றுக்கோபமாகவே இளையபூபதி கூறினார். "ஆமாம், இதற்கு அழைப்பீர்களா? ஓட்டு வேட்டைக்குப் பிரசங்கம் செய்வதற்கு மட்டும்தான் அழைபபீர்கள்—தெரியுமே எனக்கு" என்று இளையபூபதிக்கும் சாட்டைகொடுக்க ஆரம்பித்தான் முத்துராமலிங்கம்.

"வாயாடிகளுக்கு இதுகாலம் போலிருக்கிறது!" என்று வேதாந்தம்பேசினார் ஐயர். இளையபூபதியின் முகம் சிவந்தது—முததுராமலிங்கத்தைப் பார்த்து, "உன் போக்கிரித்தனமானபேச்சுக்கு,இந்த இடபேதம் அனுமதிதந்துவிட்டது. ஊரில் நீ இதுபோலப் பேசியிருந்தால், உன் வாலை ஒட்ட நறுக்கச்சொல்லி இருப்பேன்" என்று கூறினார். இதேது வழியிலே சண்டை முற்றிவிடும்போலிருக்கிறதே, என்றெண்ணி நான் பயப்பட்டேன். இளையபூபதி போர்க்கோலம் பூண்ட உடனே, ஐயரின் முகத்திலே புதியகளை உண்டாயிற்று. "தோலை உரித்துவிடச் சொல்லி இருப்பேன்—" என்று, கோபத்தை வார்த்தைகளாகக் கொட்டினார் இளையபூபதி. முத்துராமன், மீண்டும் சிரித்துக்கொண்டே "வாலைநொறுக்க, தோலைஉரிக்க, உன்னாலே முடியாது—ஆள்வைத்துத்தானே செய்யவேண்டும் — அசகாயசூரன் நீ, என்பது இதிலிருந்தே தெரிகிறதே" என்று மேலும் கேலிசெய்தான். இளையபூபதி, அவனை அடிக்கக் கையை ஓங்கினார். போக்கிரி மடையன்! குடிகாரன்! சண்டாளன்! துராத்மா! என்று, ஆத்திரமாகக்கூவினார் ஐயர், உட்கார்ந்தபடியே. நான் அலறினேன்—இளையபூபதியைப் பிடித்திழுத்து, "இதென்னவம்பு! ஓடும் ரயிலில் சண்டையா?" என்று இளையபூபதியிடம் கூறிவிட்டு,முத்துராமனைப்பார்த்து, "யாரய்யா நீ, கொஞ்சம்கூட நியாயமாகஇல்லை நீ செய்கிறகாரியம்—வலுவில் சண்டைக்கு வருகிறாய். தாறுமாறாகபேசிக்கொண்டே இருக்கிறாய். பெரிய லீடர் என்றார்கள் உன்னை—பொதுஜனசேவை என்பது இதுதானா!" என்று கோபமாகக் கேட்டேன். அவன், என்னைக் கவனிப்பவனாகவே தெரியவில்லை. இளையபூபதியைப் பார்த்தபடியே, "இது நல்ல உபாயந் [illegible]

ஒருபெண்ணை அழைத்துக்கொண்டுவருவது — கோழைத்தனததை மறைக்க, பெருமையாகக் கூறிக்கொள்ளலாமல்லவா, எனக்குப்பிரமாதமான கோபம் வந்தது, அடித்துக் கொன்றுவிட்டிருப்பேன்—ஆனால் கூட, பெண் இருந்தாள்-புலம்பினாள்—அதனாலே, பயலைப் பிறகுபார்த்துக் கொள்ளலாம் என்று விட்டு விட்டேன் என்று பேசிக்கொள்ளலாமல்லவா! அதற்காகவே, பிரயாணத்தின்போது உன்போன்ற கோழைகள், பெண்களை அழைத்துக்கொண்டு வருவது" என்று கூறினான். இளையபூபதியால் அதற்கு மேல் தாங்கமுடியவில்லை. "மடையா!" என்று அவர் கூறிய சொல் மட்டுந்தான் என் காதிலே விழுந்தது—பெரும்போர் மூண்டு விட்டது—சரியான சண்டை! ரயில் ஓடுகிறது—ஐயர் கூவுகிறார்—நான் அலறித் துடித்து அழுகிறேன்—அந்த இரண்டு காளைகளும், ஒன்றை ஒன்று தாக்கிக்கொள்கின்றன. கீழே வீழ்கிறார் பூபதி—மேலே சாய்கிறான் அந்த அதிகப்பிரசங்கி—அவனைக் காலால் உதைத்துத் தள்ளுகிறார் இளையபூபதி—அவன் கீழே சாய்கிறான்—பூபதியின் கால் செல்கிறது, அவன் மார்புக்கு நேராக—அவனோ, உதை தன்மீது விழாதபடி தடுத்துக்கொண்டு, இளையபூபதியின் காலைப் பிடித்து இழுத்துக் கீழே தள்ளுகிறான். இப்படியே சண்டை நடக்கிறது. நான் மிகவும் பயந்து போனேன்-ஐயர் கோவெனக் கதறவே ஆரம்பித்தார்—எனக்குத் திடீரென்று ஓர் யோசனை உதித்தது.

"ரயிலை நிறுத்து ஐயரே! சங்கிலியைப் பிடித்து இழு" என்று கூவினேன்—ஐயர் தயங்கினார்—நானே சங்கிலியை பிடித்து இழுத்துக்கொண்டே, "வண்டி நிற்கட்டுமடா போக்கிரி, ரங்கனைக் கூப்பிட்டு, உன் மண்டையைப் பிளக்கச் செய்கிறேன்" என்று கூறினேன். சபாஷ்!—என்று கூவினார் ஐயர். வண்டிமெதுவாக நின்றது. இளைய பூபதியும் முத்துராமலிங்கமும் சண்டையை நிறுத்தவில்லை. பலர் ஓடி வந்தார்கள். ஐயர், "அனந்தராம! ஆத்மானந்தம்! குமாரசாமி!—" என்று வண்டியிலிருந்த தன் நண்பர்களைக் கூவி அழைத்தார். நான் ரங்கா! ரங்கா! என்று கூவினேன். புலி போலப் பாய்ந்தோடி வந்தான் ரங்கன்—நிலைமையைக் கண்டான்—ஒரே குத்து —முத்துராமலிங்கம் கீழே வீழ்ந்தான். இரண்டாவது குத்துக்கு, முத்துராமனின் மூக்கிலிருந்து இரத்தம் கொட்டிற்று. இளையபூபதி களைத்துச் சாய்ந்துகொண்டார் —ஐயர் விசிறியபடி, என்ன விஷயம், என்ன விஷயம் என்றுகேட்டவர்களிடம் பேசிக்கொண்டிருந்தார். போலீசும் வந்துவிட்டது. முத்துராமனைப் பிடித்துக் கொண்டார்கள்.

"திருட்டுப்பயல்! ஜெமீன்தார் இளைய பூபதியின் பணப்பெட்டியைக் களவாட நுழைந்தான்—அவர் விடவில்லை-அடித்து நொருக்கினார்"—என்பது ஐயர் கட்டிவிட்ட கதை. அங்குகூடினோர் யாவரும் அதை அப்படியே ஏற்றுக் கொண்டனர் சந்தேகம் துளியும் கொள்ளாமல். நான் சற்று திகைத்தேன். ஐயரின் முகத்திலே வெற்றிக்களை! முத்துராமனைப் போலீசார் இழுத்துச் சென்றனர்.' அவன் போகும்போது என்னைப்பார்த்து "இதுதானம்மா இவர்கள் கையாளும் முறை என்று—" கூறிக்கொண்டே ஐயரைக் காட்டினான். (தொடரும்)

அறிவிப்பு

பாக்கி அனுப்பாத ஏஜண்டுகள் சிலருக்கு இவ்வாரம் பத்திரிகை அனுப்புவது நிறுத்தப்பட்டு விட்டது. அவர்கள் உடனே பாக்கியை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மானேஜர்.
"திராவிட நாடு"

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நாளது 17—6—48 வியாழகிழமை காலை 10-மணிக்குத் திருவாரூர் தெற்கு வீதி எங்கள் இல்லத்தில்,

இசைமணி

டி. வி. நமசிவாயம்

ஜி. குஜலாம்பாள்.

இருவருக்கும் தோழர் சி. என். அண்ணாத்துரை முன்னிலையில் பதிவுத்திருமணம் நடைபெறும். அன்பர்கள் இதையே அழைப்பாகக்கொண்டு, வந்திருந்து மணமக்களை வாழ்த்த வேண்டுகிறோம்.

அன்புள்ள

டி. என். இராமன்; டி. என். லெக்ஷப்பா.

இரும்பாரம்

4-ம் பக்கத் தொடர்ச்சி

பெற்றது. கொலம்பசின் உள்ளம் குதூகலமடையாதிருக்க முடியுமா! அவன் பட்ட கஷ்டமத்தனையும், பறந்துபோயிற்று!! மன்னனையும் ராணியாரையும் மனமார வாழ்த்தினான். தனது 'சேவை'யை அவர்கள் அவ்வளவு பெரியதாக எண்ணி, தனக்கு உபசாரம் செய்வது, அவர்களின் பெருங்குணத்தைக் காட்டுகிறது, என்று எண்ணினான். அவனை, மன்னர்மட்டுமல்ல, நாடே வரவேற்றது! அவனுடைய, புகழ் அரண்மனையில் மட்டுமல்ல, ஸ்பெயினிலே மட்டுமல்ல, வேறுபல நாடுகளிலும் பரவிற்று.

*　　*　　*

"நமக்குக் கிடைத்திருக்கவேண்டிய, பாக்கியம். மன்றாடினான், எவ்வளவோ நம்பிக்கையூட்டும் வார்த்தைகளைச் சொன்னான். மன்னா! என்னை நம்புங்கள்! மரக்கலமும் கொஞ்சம் பொருளும் கொடுத்து ஆதரியுங்கள். நான், உமக்குப்புதிய புதிய மண்டலங்களைக் கண்டுபிடித்துக் காணிக்கையாக்குகிறேன். கட்டுக்கதையென்று எண்ணிவிடாதீர்! கிடைத்ததைச் சுருட்டிக்கொள்ள, ஏதோ வாயிலே வந்ததைப்பேசுகிறேன் என்று எண்ணாதீர்! என் ஆராய்ச்சியின் முடிவை, உமக்குத் தெரிவிக்கிறேன். என் மனதிலே, பலப்பல நாட்களாக மெள்ளமெள்ள வளர்ந்து, உருவாகியிருக்கும், திட்டத்தைக் கூறுகிறேன். தயக்கம் வேண்டாம். என்தகுதிபற்றியோ, திட்டத்தின் தகுதிபற்றியோ சந்தேகிக்கவேண்டாம்—என்று, பலப்பல சொன்னான். நான் நம்பமறுத்தேன்-யாரோ ஓர் எத்தன் என்று ஏளனம் செய்தேன் — உன் 'மனோராஜ்யத்தை' நீயேஆண்டு அனுபவித்துக் கொள்—எனக்கென்று ராஜ்யமும் இருக்கிறது, யாரைநம்புவது, எதைச்செய்வது என்பதைத் தெரிந்து கொள்ளும் அறிவும் இருக்கிறது என்று ஆணவத்தோடு பேசி அனுப்பிவிட்டேன். இப்போது எனக்கு வெட்கமாகவேஇருக்கிறது, அந்த வீரன் விருதுபெற்றுத்திரும்பினான். பெர்டினண்டு பேருபசாரம் சொய்தானும். பொன்னுடை விரித்தனராம். கொலம்பஸ், அந்த வரவேற்பின்போது, என்னை எண்ணி ஏளனம்கூடச் செய்திருப்பான். அவன் கண்டுபிடித்த புதியராஜ்யம், ஸ்பெயினுக்குச் செல்வத்தையும் செல்வாக்கையும் தரும்; வியாபாரத்திலேயும் இலாபம்கிடைக்கும். அவ்வளவு தொலைவிலே, ஒரு ராஜ்யத்தை அமைப்பது என்றால், எவ்வளவு இரத்தம் கொட்டவேண்டும் படைவீரர்கள்! ஸ்பெயினுக்கு, ஒரு இலட்சியவீரனின் தயவால், ராஜ்யம் புதிதாகக் கிடைத்திருக்கிறது. அங்கே, என்னென்ன செல்வம் கிடைக்குமோ யாரறிவார்கள்! வெற்றி பெற்ற கொலம்பசை இலாபமடைந்த பெர்டினண்டு, மேலும் உற்சாகப்படுத்தி, மேலும் பலபுதிய இடங்களைக்கண்டுபிடித்து, ஸ்பெயினுக்குத் தரும்படிகூறுவான். ஸ்பானியக் கொடிபறக்கிறது, அட்லாண்டிக் கடலுக்கு அப்புறமுள்ள தேசத்தில்! என் கொடிபறந்திருக்க வேண்டிய இடத்தில்! ஏமாளிநான், கொலம்பஸ் வந்தபோது, விரட்டினேன். பெர்டினண்டு புத்தியுள்ளவன், கொலம்பசைக்கொண்டு, கண்காணுஇடத்திலேயும், தன்கொடி பறக்கச்செய்துகொண்டான்" என்று பல மன்னர்கள் எண்ணி ஏங்கினர்.

*　　*　　*

கொலம்பசின் கண்களுக்கு, குதூகலத்தோடு வரவேற்கும் மக்கள்—கைலாகு கொடுத்துகௌரவித்தஅரசனும் அரசியும், பொன்னுடை, விழா, இவைமட்டுமல்ல — இவைகளைக் கண்டு கொண்டிருக்கும் போதே, மெல்லிய ஓர் திரையில், எங்கு நோக்கினாலும் ஒரே கடல் மயம்! பெரும்புயல்! தாக்கவரும் திமிங்கிலம்! தன்னை எதிர்க்கும் கலத்தாட்கள்! காட்டுமிராண்டிக் கூட்டம்! — ஆகிய காட்சிகளும் தோன்றின—ஒருகணம். அந்தக் காட்சிமட்டுமல்ல, பலரிடம், காகிதச் சுருளையைப் பிரித்து, கோக்கோடுகள், வளைவுகள் ஆகியவற்றைக் காட்டிக் காட்டி விளக்கம் கூறுவது, அதனை அலட்சியமாகக் கேட்டுவிட்டு, ஆணவத்தோடு சிரித்துவிட்டு, எடுத்துச்செல் இந்த ஏடுகளை என்றுஉத்தரவிட்டுவிட்டுச்செல்லும் சீமான்கள், மன்னர்கள், கையைக் காட்டி, போகிறான் பார் பித்தன்! புதிய பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கப் போகிறானாம்!! என்று ஏளனம் செய்வது போன்ற காட்சிகளும் தெரிந்தன—ஆனால் மறுகணம் அவை மறைந்தன—எதிரே, ஸ்பெயின் நாட்டரசரும் அரசியும் புன்னகையுடன் வீற்றிருக்கிறார்கள்—மேலே பொன்னுடை — சூழ நிற்கிறார்கள் வரவேற்பளிப்போர்—விருந்துநடைபெறுகிறது—இவைகள் தெரிந்தன. கொலம்பசின் மனதிலே மகிழ்ச்சி பொங்கிற்று—கண்களிலே, நீர்த்துளிகள் தோன்றித் தவழ்ந்தன.

கொலம்பஸ் வாழ்க! அலைகடலில் அஞ்சாது சென்று புதிய உலகைக் கண்ட வீராதி வீரன் கொலம்பஸ் வாழ்க!—மக்களின் முழக்கம்—பல ஆண்டுகள் பட்ட கஷ்டத்துக்குப் பரிசு! ஆனந்த அறுவடை!!

*　　*　　*

கனவு காண்கிறான்! — என்றே, நண்பர்கள் கூட எண்ணினர். கொலம்பசின்திட்டம், யாருக்குமே, முதலில் நம்பிக்கையூட்டுவதாகத் தான் இராது. அட்லாண்டிக் பெருங்கடலைத் தாண்டி, பெரியதோர் பிரதேசம் இருக்கிறது—திசை தெரியாததாலும், போதுமான ஆராய்ச்சி இல்லாததாலும் அந்தப் பிரதேசங்களை இதுவரையாரும்சென்றுபார்த்ததில்லை. யாரும் சென்று பார்க்காததாலேயே, அங்கு ஏதும் இல்லை—என்று முடிவு செய்துவிட்டனர். அவர்கள் முடிவு தவறு! நான், அந்தத்தவறை உலகுக்குவிளக்கப்போகிறேன்—அந்தப்புதிய பிரதேசத்தைக் கண்டுபிடிக்கப் போகிறேன் என்று கொலம்பஸ், ஆர்வத்துடன் பேசினான். பெரியவர்கள் கண்சிமிட்டினர்—பெண்கள் உதட்டை அசைத்தனர்—வாலிபர்கள் கைகொட்டிச் சிரித்தனர்.

*　　*　　*

கொலம்பஸ், மிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்தவன். குறிப்பிடத் தக்க சம்பவம் எதுவும் அவனுடைய இளமையின் போது நடந்ததில்லை. அவன்உள்ளத்திலே, உலகப் போக்கையே மாற்றி அமைக்கக் கூடிய ஓர்திட்டம் உருவாகிக்கொண்டிருக்கிறது என்று எண்ணும்படியான நடவடிக்கைகளும் அவனுடையஇளம்பருவத்திலே கிடையாது.

அவன் உடன்பிறந்தானொருவன்; பார்த்தலோமியோ எனும் பெயருடையான், மரக்கலக்காரருக்கு உபயோகமாகும், படங்கள் தயாரிக்கும் பணியில்ஈடுபட்டிருந்தான், லிஸ்பன் நகரில்.

கொலம்பஸ், ஒரு பிரபல இத்தாலியக்கடற்படை அதிகாரியின் மகளைக் கலியாணம் செய்துகொண்டான். அதனால், கடல்மார்க்கம், தொலைவிலுள்ள தீவுகளின்வரலாறு, வாணிபம், போன்ற துறைகளைப் பற்றிய கருத்துவளர வழி பிறந்தது.

இந்த இருதொடர்புகளைக் கொண்டு, உலகம் புகழும் செயலைச் செய்துவிட முடியாது, எனினும், கொலம்பசின் மனதிலே, இந்தத் தொடர்புகளின் காரணமாக, புதிய நாடுகளைக் கண்டறியவேண்டும் என்ற ஆவல் பிறந்தது. அதற்கான ஆராய்ச்சியிலீடுபட்டான். எத்தனை இரவுகள் தூக்கம் வராமல் புரண்டானோ! எத்தனை நாட்கள், ஊண் மறந்து, உள்ளத்தோடு போராடினானோ! அவன் மனதிலே, மாபெருந்திட்டம் உருவாவதற்குள், விவரிக்க முடியாத புயலும் தென்றலும் மாறி மாறிக் கிளம்பித்தான் இருக்கும்.

அசைக்க முடியாத நம்பிக்கை பிறந்துவிட்டது, கொலம்பசுக்கு. அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்து சென்றால், புதிய நாடுகளைக் காணமுடியும் என்ற நம்பிக்கை. இதனை அவன் முதலிலே கூறிய போது பலரும் நையாண்டி செய்தனர்; கொலம்பஸ் மனம் ஒடிந்து போகவில்லை, மேலும் மேலும் அதனையே கூறினான், பலரிடம்; பன்னிப் பன்னி, கெஞ்சினான் தன்னை நம்பும்படி; வேண்டிக்கொண்டான், தன் திட்டத்தை பரீட்சை பார்க்கும்படி; போடா பைத்யக்காரா! உள்ள உலகம் போதும்—நீ ஒன்றும் புதிய உலகத்தைக் கண்டுபிடிக்கவேண்டாம்!—என்று கேலி செய்தனர். பயல், பலே அண்டப்புளுகன்! ஆயிரமாயிரம் தடவை கடற்பயணம் செய்தவர்களெல்லாம் கூறாததைக் கூறுகிறான், தைரியமாக! அட்லாண்டிக் கடலைத் தாண்டிச் சென்றால், அற்புதமான பலநாடுகள் உள்ளனவாம்—யாரும் காணாதவைகளாம்—அளக்கிறான் கதை!—என்று அலட்சியமாகப் பேசினர். கொலம்பஸ், சலித்துப் போகவில்லை. சொல்லிக் கொண்டேஇருந்தான்-கெஞ்சிக்கேட்டுக்கொண்டே இருந்தான்—யாராவது ஒருவர் தன்வார்த்தையிலே நம்பிக்கை கொள்வார்கள் என்ற எண்ணத்தை அவன் கைவிடவில்லை.

அரசுதனை விரிவாக்கிக் கொள்ளவும், செல்வத்தைப் பெருக்கிக் கொள்ளவும், ஆவல்கொண்ட மன்னர்களிடம் சென்றான். கொலம்பசின், திட்டம், வெறும் கனவு—அல்லது எத்தனின் ஏற்பாடு—அல்லது பித்தனின் உளறல்—என்றேஎவரும் கருதினர்.

ஜினிவா குடியரசுக்காரரிடம் கூறிப்பார்த்தான்; போர்ச்சுகல் மன்னரிடம் பேசிப்பார்த்தான்; பிரிட்டிஷ் மன்னனுக்குச் சேதி அனுப்பிப் பார்த்தான்; எங்கும்ஏளனம், அலட்சியம், இவைகளே பதிலாகக் கிடைத்தன.

ஸ்பெயின் அரசரிடம் கூறுவோமென்றெண்ணி, பலமுறைஅவரைக் காண முயற்சித்தான்; சுலபமான காரியமா? கொலம்பஸ் என்ன கொற்றவனா! அரச தூதனா! ஆஸ்தானக் கவியா! இல்லை, ஆடலழகியா! சுலபத்திலே, பேட்டி கிடைக்க.

மிகச்சிரமபட்டுத்தான் ஸ்பெயின் நாட்டரசன், பெர்டிணண்டை பேட்டி கண்டான் — தன் திட்டத்தைக் கூறினான்.

"மூன்று கலங்கள்! உடன்வரச் சில ஆட்கள்! கொஞ்சம் பொருள்! உமது ஆசி! இவைகளைத் தாருங்கள்—உமக்கு நான் புதிய, பெரிய, ராஜ்யத்தைக் காணிக்கையாகத் தருகிறேன்"—என்றான். மன்னனுக்கு, எப்படியோ, ஓர்வித நம்பிக்கைபிறந்தது. "அங்ஙனமே ஆகுக! நீ, ஏதேனும் புதிய ராஜ்யத்தைக் கண்டு பிடித்தால், உன்னையேதளபதியாக்குகிறேன்—அந்தப் புதிய ராஜ்யத்தின் வருவாயிலே, பத்திலோர் பாகம், உனக்குப், பரம்பரையாக அனுபவிக்கும் உரிமை தருகிறேன். வெறுங்கையுடன் திரும்பினால், பரிசுமில்லை...." என்றான் பெர்டிணண்டு. கனவு உலகிலிருந்து நிஜ உலகு வந்தவனானான் கொலம்பஸ்.

கலங்கள் கிளம்பின! கண்களிலே ஆர்வஒளி வீசிற்று! கலங்கள் சென்றன, சென்றன, நெடுந்தூரம்—கண்ணுக்கெட்டிய தூரம், கடலேதான்! வழக்கமாகக் கடற்பயணம் செய்யும் போதும், வாணிபத்துக்காகப் போகும்போதும் காணக்கூடிய பிரதேசங்களெல்லாம் மறைந்துவிட்டன; எதிரே கடல்! கொலம்பஸ், செல்கிறான், நம்பிக்கையுடன், தொலைவில், பெரியதோர் பூபாகம் இருக்கிறது! வாருங்கள், காட்டுகிறேன்! என் கணக்குப் பொய்யல்ல! என் திட்டம் கனவல்ல! என்முயற்சி வீண்போகாது! என்று ஆவேசத்துடன் பேசுகிறான். கண்ணெதிரே கடலன்றி வேறுகாணாத, உடனிருந்தோரின் உள்ளத்தில், சலிப்பு, வெறுப்பு, திகில், கோபம், கொப்பளித்தது.

இவனோர் பித்தன்! என்றனர் அவர்களும்.

அந்தப் பித்தன் மனதிலே மட்டும் இருந்த உலகம்தான், இன்று உலகினர் கண்டு அதிசயிக்கும், அமெரிக்கா கண்டம்.

எதற்கும் அஞ்சாமல், சென்றான்;

அதோ ஓர் இடம்! தரை! நிலம்! பிரதேசம்! ராஜ்யம்!—ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமான பெயரிட்டுக் கூவினர். களித்தனர். கூத்தாடினர். "பித்தன்! நான்பித்தன்! அல்லவா?" என்று கேட்டது, கொலம்பசின் பார்வை. கொலம்பஸ், தான் கண்டு பிடித்த அந்தஇடத்திற்கு, சேயின்ட் சால்வடார் என்று பெயரிட்டு, அங்கு, ஸ்பெயின் நாட்டுக்கொடியை நாட்டினான்! வெற்றி தந்த உற்சாகத்தால், மேலும் தொடங்கினான் பயணத்தை! வேறு பல இடங்கள்! புதிய புதிய தீவுகள்! எல்லாம் ஸ்பெயினுக்குச் சொந்தமாக்கினான். ஸ்பானியக்கொடி பறந்தது, ஸ்பெயினுக்கு வெகு தொலைவில்! ஸ்பெயினுக்குப் புதிய புதிய ராஜ்யங்கள் கிடைத்தன — ஸ்பானிய அரசன் காணாத தேசங்கள்! உலகப் படத்திலே அதுவரை குறிக்கப்படாத நாடுகள்! கற்பனைக்கு எட்டாமலிருந்துவந்த தேசங்கள்; அங்கெல்லாம் ஸ்பானிஷ் கொடி! அந்த இடங்கள், இயற்கை அழகும் செல்வமும் நிரம்பிய இடங்கள். எதிர்ப்புகள் இருந்தன! கொலம்பஸ், அவைகளைச் சமாளித்தான்.

பிறகு, திரும்பினான்! வெற்றிக் களை முகத்தில் தாண்டவமாட. கண்டுபிடித்த நாட்டுப் பொருட்குவியல் கலத்திலோர் பகுதியில் இருந்தது; அந்த நாட்டு மக்கள் சிலரையும் அழைத்துவந்தான்.

இந்த அற்புதமான வெற்றிக்குப் பிறகுதான், அரசன் பெர்டிணண்டும், அரசிஇஸபெல்லாவும், கொலம்பசுக்கு மகத்தான வரவேற்பளித்து, தம்முடன் சரிசமமான ஆசனமளித்து, கொலம்பசைக் கௌரவித்தனர். பொன்னாடையை மேலே விரித்து, அதன் நிழலில் அவன்

நடந்து வரும்படி செய்தனர். பல நாடுகளிலே அவனுடைய புகழ் பரவிற்று. அவனைப் பித்தனென்றும் எத்தனென்றும் கேலி பேசியும் கண்டித்தும் வந்தவர்கள், வெட்கினர். வெற்றிவீரனாக விளங்கினான் கொலம்பஸ்.

* * *

எவ்வளவு அலட்சியப்படுத்தப்பட்டாலும், ஏளனத்துக்கு ஆளானாலும், எடுத்த காரியத்தை முடித்தே தீருவது என்ற திடசித்தமும், விடாமுயற்சியும் இருந்தால், வெற்றி கிடைத்தே தீரும். தூற்றினோரே துதி பாடி நிற்பர். ஏளனம் பேசினோர், 'ஏத்தி ஏத்தித் தொழுவர்! சந்தேகமிருப்பின், கொலம்பசின் இன்றைய நிலையைப் பார். மன்னர், அவனைத் தன் நண்பனென்று கூறி மகிழ்கிறார். ஸ்பானிஷ் மண்டலம் அவனைப் போற்றுகிறது. மானிலமே அவனைப் புகழ்கிறது— என்று பலரும் கூறினர்.

* * *

கொலம்பஸ், தன் திட்டம் வெற்றி பெற்றதற்குக் காரணம் வேந்தன் தன்னிடம் காட்டிய ஆதரவுதான், என்பதைக் கூறிக் கூறிப் பூரித்தான். ஒருவன் திறமைசாலியாக இருக்கலாம், அபூர்வமான ஆராய்ச்சியாளனாக இருக்கலாம், ஆனால், அவன் வெற்றிபெற, அந்த வெற்றியினால் பலரும் நன்மைபெற, யாரேனும் கருணை உள்ளம் படைத்த ஒருவர், அவனுக்குத் தக்க சமயத்திலே, 'கை கொடுத்து' உதவ முன்வர வேண்டும்; இல்லையேல் அவனுடைய திறமை, காட்டு மலராகும்—மீட்டுவாரற்ற வீணையாகும்—என் 'இன்பக் கனவு' பலித்ததற்குக் காரணம், தக்கார்க்குத் தக்கது செய்யும் தன்மை வாய்ந்த மன்னனின் உதாரம்தான் — என்று எண்ணி மகிழ்ந்தான்.

* * *

பெற்ற வெற்றியுடன் திருப்தி அடையவில்லை—இவை இனிப்பெற வேண்டிய பெருவெற்றியின் அடையாளங்கள் என்று கூறி மீண்டும் மன்னன் ஆணை பெற்று, மரக்கலம் ஏறினான்—மேலும் பல புதிய நாடுகளைக் கண்டறிய. இம்முறை, கொலம்பஸ் கிளம்பும்போது, அரச குடும்பமே தன்னை ஆசி கூறி வழியனுப்புவது கண்டானா—களித்தான். ஒரு நாட்டு மக்களே நல்வாழ்த்துக் கூறி அனுப்பிடக் கண்டு மகிழ்ந்தான். முதல்தடவை சென்றபோது, ஊர் மக்களின் ஏளனம்—சிலருடைய ஆணவம்—மன்னனுடைய சந்தேகம் கலந்த அனுமதி — இவைகளே, கொலம்பசுக்குக் கிடைத்தவை. போகிறான் பிழைக்கத் தெரியாதவன்! என்று பேசினோர் உண்டு; பிழைக்கத் தெரியாதவனா? அவனா? பிழைக்கத் தெரிந்தவன்; அதனாலே தான் புளுகு பேசி, மன்னனையே மயக்கிப் பொருள்பெற்றுக்கொண்டு போகிறான் என்று ஏசினோர் உண்டு. கடற்கொள்ளைக்காரனாகி விடுவான், என்று ஆருடம் கூறினர் சிலர்; கடலுக்குப் பலியாவான் என்று சபித்தனர் சிலர். இரண்டாம் முறை, அவன் புறப்பட்டபோதோ, எவரும் ஏளனம் பேசத் துணியவில்லை—எதிர்ப்போர் கிடையாது—அவன் திறமைசாலி, மேலும் பல வெற்றிகள் பெற்றுவருவான் என்று பாராட்டினர். நிலைமை அவ்வளவு மாறியிருந்தது—பெற்ற வெற்றியினால். கலம் சென்றது—களிப்பு, கொலம்பசுக்கு விருந்தளித்தது. மன்னனும், தன் மண்டலம் விரிவடைவது கண்டு மகிழ்ந்தான். மக்களும், தமது நாட்டுக் கீர்த்திவளரக் கண்டு களித்தனர். ஆனால், அனைவருமா? அல்ல! அல்ல! மல்லிகைத் தோட்டத்திலே மணம் வீசினாலும், புதரில் மறைந்திருக்கும் பாம்பின் குணம் மாறாதே! அதுபோல், ஸ்பானிஷ் மக்களில் பெரும்பாலோருக்கு, கொலம்பசின் வெற்றி, பெருமையையும் பூரிப்பையும் தந்ததென்றபோதிலும், சிலருக்குக் கோபத்தையும் பொறாமையையுங்கிளறிற்று. சொன்னபடி செய்துகாட்டியேவிட்டானே!—என்று எண்ணினர்—கோபம் புகையலாயிற்று. பயலுக்கு, எப்படிப்பட்ட மரியாதை, வரவேற்பு! பொன்னுடையல்லவா, குடையாக அமைந்தது அவனுக்கு, கேட்பாரற்றுக் கிடந்தான்—பித்தன் போல் அலைந்தான்—இன்று பேரரசனின் பக்கத்திலே அமர்ந்தான்!— என்று முணுமுணுத்தனர்—பொறாமை மூண்டது. இனி மண்டைக் கர்வம் பிடிக்கும் அவனுக்கு! இந்த மண்டலத்து மக்களை அவன் மதிக்கவே மாட்டான். மன்னனைக் கூட ஆட்டிவைப்பான்! — என்று பேசலாயினர்—கலகத்தை நடமாட விட்டனர்.

கொலம்பஸ் எந்தத்திக்குச் சென்றால், எந்தத்தீவு காணலாம், என்ற கணக்கிட்டுக்கொண்டு, கலத்திலே கவலையுடன் உலவிக்கொண்டிருக்கும் நேரத்தில், பொறாமை கொண்டவர்கள், யாரிடம் எந்தவிதமான, கலகமூட்டி, கொலம்பசின் கீர்த்தியைக்கெடுத்து, அவனுக்குள்ள செல்வாக்கைக் குலைப்பது, என்பதற்கான திட்டங்களைத் தீட்டலாயினர். கொலம்பஸ் கண்டானா, சுயநலச் சுறாமீன்களும், தன்னலத்திமிங்கலங்களும், சதிச்சுழல்களும், நாட்டிலே உண்டு, என்பதை. அவன் அகமகிழ்ந்து இருந்தான்—தான் பெற்ற வெற்றி கண்டு அனைவரும் பாராட்டுகிறார்கள்—உடனடியான கீர்த்தி தனக்குக் கிடைத்தபோதிலும், உருவானபலனும், நிரந்தரமான கீர்த்தியும் நாட்டுக்குத்தானே கிடைக்கும்—இந்த நற்காரியத்தைச் செய்யக் கிளம்பும் தன்மீது, யாருக்குத்தான், எதற்காகத்தான் நச்சுநினைப்பு ஏற்படப்போகிறது — என்று எண்ணினான். வெற்றி பெற்றதொன்றே போதும், சிலரை விரோதிகளாக்க, என்பதை அறியான். கீர்த்திக்கனி வாயிலே நுழையும்போது, காதகர்கள், காரணமின்றிப் பாறைகளை உருட்டிவிடுவர், மேலே, என்பதை அவன் அறியவில்லை. நம்மில் ஒருவன் நாம் அடையாத நிலையை அடைவதா என்று எண்ணுபவர்கள் உண்டு, எங்கும் எந்நாளிலும், என்பதை அவன் அறியவில்லை. கடலிலே அலை இருப்பதுபோல, சமூகத்திலே, நயவஞ்சகம் உண்டு, என்பதை அறியவில்லை. அவன் கலத்தை மேலும் மேலும் செலுத்திக்கொண்டு சென்றான், நயவஞ்சகர்கள் நாட்டிலே கலகத்தை மெள்ள மெள்ள மூட்டியபடி இருந்தனர்.

* * *

கொலம்பஸ், பாக்கியசாலி!

பெர்டினாண்டு ஒரு பெருங்குணவான்—கொலம்பசுக்குக்கைகொடுத்துத் தூக்கிவிட்டார்!

ஏறிய ஏணியைக்கீழேதள்ளிவிடும் பேர்வழிகள் உண்டு!

கொலம்பஸ், இனித் தனக்கு ஏணியே தேவையில்லை, நிலை அவ்வளவு உயர்ந்துவிட்டது என்று எண்ணுகிறான்.

கலத்திலே, அவன் காவலன் போலவே கொலுவீற்றிருக்கிறான்.

காட்டுமிராண்டிகள், கொலம்பஸைத்தான், ஸ்பெயின்நாட்டு மன்னன் என்று நம்பிவிட்டார்களாம்.

பயல், சாமார்த்தியசாலி! புதியபிரதேசங்களிலிருந்து, ஏராளமான நவரத்னங்கள் கொண்டுவந்தான்—மன்னனிடம் ஒன்றைக்கூடக் காட்டவில்லை.

இம்முறையும் வெற்றியுடன் திரும்பினால், பிறகு அவனைக் கையில் பிடிக்கவேமுடியாது.

மன்னன்மட்டுமென்ன! மண்பொம்மைதான் இனிமேல்.

அதுபோலவே பேசினானாமே கொலம்பஸ்.

ஆமாம்! குடிவெறியில்!

கொண்டுவந்த நவரத்னங்களிலே சிலவற்றைக் கூத்தாடும் குட்டிகளுக்குக்கொடுத்தானாம். ஏன் அவன் விஷயத்தைப் பேசுகிறீர்கள் — அவனால், ஸ்பெயின்நாட்டுக்கீர்த்திவளருவதாக மன்னர் எண்ணுகிறார் — அவனோ மன்னனின் ஆதரவைப் பயன்படுத்திக்கொண்டு தனது நிலையை உயர்த்திக்கொள்கிறான்.

சுயநலக்காரன்!

சூதுக்காரன்!

மண்டைக்கர்வி!

பேராசைக்காரன்!

அதிகார வெறியன்!

அகம்பாவக்காரன்!

* * *

காட்டிலே, இரவு வேளைகளில் புலி, ஓநாய், நரி, செந்நாய், காட்டெருமை, முள்ளம்பன்றி, இப்படிப் பலப்பல கிளம்பிச்சுற்றுமல்லவா, இரை தேடி. அதுபோல, கொலம்பஸ் ஊரிலே இல்லாதபோது கிளம்பின, மேலே குறிக்கப்பட்ட, விஷப்பேச்சுகள்! ஊரெங்கும் பரவின — பலருடைய உள்ளத்தைக்கெடுத்தன —ஆள்வோரின் மனதையும் கெடுத்தது. விஷவிவசாயிகள் பூரித்தனர். தொலைவிலே ஏதோ, பச்சென்று தெரிகிறது—புதிய தீவாகத்தான் இருக்கும், என்று எண்ணிக் கொலம்பஸ் களித்திருந்தபோது, தங்கள் கலகப்பேச்சு, இன்னின்ன இடத்திலேபரவி, இன்னின்னவரின் மனதைக்கெடுத்துவிட்டது, ஆகவே கொலம்பசுக்கு, இந்த அளவு எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறது, என்று கணக்கிட்டுக்களித்தனர், காதகர்.

சிலபுதிய இடங்களைக் கண்டுபிடித்து, அங்கெல்லாம் முறைப்படி ஸ்பானிஷ் கொடியை நாட்டிவிட்டு, மீண்டும் ஊர் திரும்பினான் கொலம்பஸ். பழைய குதூகலம், இல்லை மக்களிடம்! புதியதோர் நிலையைக் கண்டான் புன்முறுவல் இயற்கையாக எழவில்லை; பாராட்டுகிறார்கள். ஆனால் அதிலேயும் ஏதோ கேலியும் தொனிக்கிறது. பார்வையிலே ஓர் வகை பகைமை தெரிகிறது. கொலம்பஸ் கவலைப்பட்டான். பிறகுதெரிந்துகொண்டான், தான் இல்லாதபோது தன்னலக்காரர்கள், பொல்லாங்கு பேசி, நிலையைக் கெடுத்துள்ளனர் என்பதை. கோபம் மூண்டெழுந்தது! செ! இவர்களும் மக்களா! எவனோ, எதற்கோ ஏதோ பேசினால் அதைக்கேட்டு நம்பி, நம்மீது கொண்ட அன்பைக் குறைத்துக் கொள்வதா! இவ்வளவுதானா, இவர்களின் குணம்! இதற்கா இவ்வளவு பாடுபட்டோம்! — என்று எண்ணி ஏங்கினான். மீண்டும் யோசித்தான். பாபம்! அவர்கள் என்ன செய்வார்கள்! நயவஞ்சகர்கள், நம்மீது கொண்ட பொறாமையினால், கட்டிவிட்ட கதைகளை நம்பி ஏமாந்தனர். உண்மை அறியாததால், அவர்கள் உள்ளம் பாழ் பட்டிருக்கிறது. உண்மையை உரைக்கவேண்டும், என்று தீர்மானித்து, கலக மூட்டினோர், தன்னைப்பற்றிக் கூறிய குற்றச்சாட்டுகளை எல்லாம் தவிடு பொடியாக்கினான். மக்கள், தங்கள் தவறை உணர்ந்தனர். வீணாகச் சந்தேகித்தோம்—யார் பேச்சையோ கேட்டுக்கொண்டு கொலம்பசை நிந்தித்தோம் — நயவஞ்சகர்கள் அவனைப் பற்றிச் சொல்லிவைத்த ஒரு குற்றச்சாட்டுக்குக்கூட ஆதாரம் இல்லை என்பது இப்போதல்லவா தெரிகிறது என்று பேசிக்கொண்டனர். மாசு துடைக்கப்பட்ட மாணிக்கமானான் கொலம்பஸ். ஆனால், மக்களின் போக்கும், அந்தப்போக்கை உண்டாக்கிய பொச்சரிப்புக்காரரின் போக்கும் கொலம்பசின் மனதிலே, ஆற்றமுடியாத ஓர் புண்ணை உண்டாக்கிற்று. மனம்தானே! அவனும் மனிதன்தானே!!

மீண்டும் கிளம்பினான் கொலம்பஸ், ஸ்பெயினுக்கு நாடு தேட, புகழ் தேட. ட்ரினிடாட் தீவு, போன்ற பல புது இடங்களைக் கண்டு பிடித்தான்—ஹிஸ்பானியோலா என்ற பிரதேசத்தில, ஸ்பானிஷ் ஆட்சியை அமைத்தான்— அங்கு கிளம்பிய எதிர்ப்பை அடக்கினான்.

காட்டுமிராண்டிகளின் எதிர்ப்பைத்தான் கொலம்பஸ், கடும் போரிட்டேனும் அடக்கமுடியும்— கலகமூட்டுவோரின் எதிர்ப்பை என்னசெய்வது! அவர்களோ, ஸ்பெயினில் வேலைசெய்கிறார்கள், கொலம்பசோ ஹிஸ்பானியோலாவில் இருக்கிறான்.

ஸ்பெயினில், கொலம்பசுக்கு எதிர்ப்பு, சரியானபடி கிளப்பிவிட்டனர். கலக மூட்டுவோர், சரியான விசையை அறிந்து, அந்தக் காரியத்தைச் செய்தனர்.

எவ்வளவுதான், மன்னர், கொலம்பஸைப் பாராட்டினாலும், அவன் திறமையைப் புகழ்ந்தாலும், அவனுடைய சேவையால், தன் ராஜ்யத்துக்குப் புகழ் கிடைத்தது என்று கூறினாலும், உள்ளூர அவர் மனதிலே, “கொலம்பஸ் இவ்வளவு கீர்த்திபெற்றது, நமது ஆதரவால்தான்! கொலம்பஸ் புதியநாடுகளைக் கண்டுபிடித்துக் காட்டினான். பெருமைக்குரியதுதான் —ஆனால், கொலம்பஸை உலகுக்குக் காட்டியது யார்? நாம்தானே! நாம், அவனுடைய திட்டத்தை அங்கீகரித்து, ஆதரவளித்திராவிட்டால், கொலம்பஸ், பித்தன் போலப் பிதற்றிக்கொண்டுகிடந்திருப்பான். நமது ராஜ்யம் பெரிதாகி இருக்கிறது— ஆனால் அப்போதும், நாம் ராஜாதானே! அவனோ, பித்தனாகவன்றோ இருந்திருக்கவேண்டும்! அவனை

(5-ம் பக்கம் பார்க்க)

மறைவு

சென்னைத் திராவிடர் கழக உறுப்பினர் தோழர் எம். ஏ. கிருஷ்ணசாமி அவர்களின் வாழ்க்கைத் துணைவியார், குழந்தைப் பேற்றின் காரணமாக ஏற்பட்ட ஜன்னி நோயால் 1—6—48—ல் இராயபுரம் ஆஸ்பத்திரியில் காலமானார். அன்னாரின் பிரிவால் வருந்தும் தோழர் கிருஷ்ணசாமிக்கும் அவரது குழந்தைகளுக்கும் ஆறுதல் கூறுகின்றோம்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi Street. Conjeeveram.